
# பூவரசு

## Poovarasu



ஆடி-ஆவணி 1993

வாசித்தீர்களா?

உங்கள் அபிமான நாவலாசிரியர்
இந்துமகேஷ்
எழுதிய

**மேனியைக்கொல்வாய்.**
(நெடுங்கதை)



**இது ஒரு**
**பூவரசு வாசகர்வட்ட**
**வெளியீடு!**

# பூவரசு

POOVARASU.

இனிய தமிழ் ஏடு.

இரு திங்கள் ஒன்று

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்

## இதழ்:16

ஆடி-ஆவணி 1993.

படைப்பவர் ஆக்கம் தருக
படிப்பவர் ஊக்கம் தருக.

பூவரசு பற்றிய சகல தொடர்புகளுக்கும்:

"POOVARASU"
Sinniah Maheswaran
Neuwieder str.32
28325 BREMEN

Germany

# பூவரசு
## வாசகர்வட்டம்

இனிய தமிழ் ஏடு.

## அன்பு வாசக நெஞ்சங்களுக்கு!

அன்புடன்! பூவரசு இனிய தமிழ் ஏடு- பூவரசு வாசகர் வட்டம் என்னும் ஓர் அணியின்கீழ் கலை இலக்கிய ஆர்வலர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது தாங்கள் அறிந்ததே. இவ் வாசகர் வட்டத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள முதற்கட்ட வாசகர்களைப்பற்றிய விபரங்களையும், வாசகர்வட்டத்தின் நோக்கங்கள்பற்றிய விபரங்களையும் உள்ளடக்கியதாக சிறு கையேடு ஒன்று ஏற்கனவே வெளியிடப்பட்டு அதன் அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே விண்ணப்பிக்காத பல வாசகர்கள் இப்போது பூவரசு வாசகர் வட்டத்தில் இணைந்துகொள்ள ஆர்வம் காட்டிவருவதால் விரைவில் மற்றொரு கையேட்டினை வெளியிட ஆவன செய்துவருகிறோம். பூவரசு வாசகர்வட்டம் முன்னெடுக்கவுள்ள சில திட்டங்கள்பற்றி ஏற்கனவே பூவரசு இதழ்களில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் புதிய வாசகர்களுக்காக அவைகளை மறுபக்கம் வெளியிட்டுள்ளோம். ஏற்கனவே விண்ணப்பித்திருந்த அங்கத்தவர்களிடையே சில பிரதிநிதிகளைத்தெரிவு செய்து பூவரசு வாசகர்வட்ட ஆலோசனைக்குழுவொன்றை அமைத்துள்ளோம். தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகளுக்கு அதுபற்றி அறிவித்தல் தந்துள்ளோம். பூவரசு என்னும் இந்தச் சிற்றேட்டின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டுகின்ற அனைத்து வாசகர்களும் இவ்வாசகர்வட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்பது எமது ஆவல்.

## பூவரசு வாசகர்வட்டத்தின்
## ஆரம்பத் திட்டங்கள்:

1.பூவரசு வாசகர் வட்டத்தின் அங்கத்தினர்களிடையே அனைத்து நகரங்களிலிருந்தும் பிரதிநிதிகளைத்தெரிவுசெய்து ஆலோசனைக்குழு ஒன்றினை அமைத்தல்.

2.தற்போது புலம்பெயர்ந்தோர் இலக்கியத்துறைக்குப் பணியாற்றிவரும் அனைத்து தமிழ் வார.மாத இதழ்கள்பற்றிய அறிமுகத்தொகுப்பு ஒன்றினை வெளியிடுதல்.

3.அனைத்துதமிழ் வார மாத இதழ்களிலும் வெளியாகும் படைப்புக்களில் தரமானவற்றை அரையாண்டு,ஓராண்டு என்னும் காலக்கணக்கில் வாசகர்வட்டத்தினூடாகத்தெரிவுசெய்து அவற்றுக்குப்பரிசு வழங்கிக் கௌரவித்தல்.

4.பூவரசு ஒவ்வோராண்டின் நிறைவின்போதும் அனைத்து தமிழ் வார மாத இதழ்களிலும் வெளிவந்த ஆக்கங்களில் தரமான ஆக்கங்களை வாசகர் வட்டத்தினூடாகத்தெரிவுசெய்து தொகுப்பாக வெளியிடுதல்.

5.சிறந்த ஆக்கதாரர், சிறந்த வாசகர்களைத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்தல்.

6.நமது தாயகத்தில் வாழும் கலை இலக்கிய ஆர்வலர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்தம் இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.

பூவரசு வாசகர்வட்டம் முன்னெடுக்கும் முதல் முயற்சிகள் இவையே. வாசகர்களின் கருத்துக்கள் தொடர்ந்தும் பெறப்பட்டு செயற்திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்படும்.

இந்துமகேஷ்.

அமைப்பாளர்,
பூவரசு வாசகர் வட்டம்.

தமிழ் வாழ்க!

# பன்னாட்டுத் தமிழுறவு மன்ற

உலகளாவிய மூன்றாம் மாநாடு!
பேர்லின்–ஜெர்மனி.

**THIRD WORLD -
CONFERENCE OF
INTERNATIONAL TAMIL
INTEGRATION SOCIETY
GERMANY - 1993**

நாள்

1993 ஆகஸ்ட் திங்கள் 12 முதல் 15 வரை
அமைப்பு
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

தலைமைச் செயலகம்

'திருவள்ளுவர் இல்லம்'
12 சாயிநகர் இணைப்பு,
ஐயப்பா நகர்,
சென்னை - 600 111.
தொலைபேசி : 044-423375
தொலை நகல் - 91-44-568990

மாநாட்டுச் செயலகம்

**THIRU. V.S. GUNA RATHNAM
HELM STR - 8
10000 BERLIN 62
WEST GERMANY**

**தமிழர் பண்பாட்டை
உலகிற்கு உணர்த்தும்வகையில்
பல்வேறு நிகழ்ச்சிகள்
நடைபெறவுள்ளன.**

# மூன்றாவது பரிசுபெற்ற கவிதை.

உலகம் ஒரு நாடகமேடை
அதில் மனிதரெல்லாம் நடிகர்கள்
என்றான் ஓர் அறிஞன்.
உண்மைதான்!
தமிழனும் மனிதனாய்ப் பிறந்ததனால்
உலகத்தின் ஒவ்வொரு சந்தியிலும்
நின்று நடிக்கின்றான்.
ஏனோ அவன் நடிக்கும் பாத்திரம்
என்றும் மிகமோசமான
பிச்சைக்கார வேடங்கள்!

என் இனமே நான் சொல்லக்கேள்!
நீ பிழைப்பதற்காய்
பிச்சைக்கார வேடமிட்டு
உலகைச்சுற்றி நடிப்பதனால்
உன்னை நீ பத்திரமாய்
பசி ஆற்றி படங்காட்டி
பகட்டாக்கி மகிழ்ந்திடலாம்
ஆனால்—
நீ போடும் வேடத்தால் உன்முகத்தில்
பட்டகடன் சுமைபோல படிந்திருக்கும்
அவமானச்சுமை அழுக்கை
அழித்துவிட முடியாதுன்னால்.
ஆனால்,
ஆதிக்க மோகத்தில் வேர்விட்டு
விழுதுகளாய் விளைந்திட்ட
அந்நியர் அறிப்பார் முழுதாய்;
உன் முகம் பட்டகடன் சுமை அழுக்கை
மட்டுமல்ல

உன்னையும் உன் சந்ததியையும்
பொம்மை மெழுகுவர்த்தி எரிவதுபோல்
ஆனால்—
உம்மை உயிரோடு
எரித்தழித்து சுத்தமிட்டு
தன்நாடு தூய்மைபெற்ற
திருநாள் இதுவென்று கொண்டாட
இன்னும் மதுவைச்
சுவைப்பார்கள் சுகமாக.
சுட்டெரிக்கும் சூரியனே
நிழல் தேடினால் ஒதுங்க
பட்டமரம்கூட பரிகாசம்பண்ணுமடா
நீ பட்ட துயர் விந்தையல்லடா
பட்டும் புத்திகொண்டு நிற்பதேனடா?
உன் விதிமாற்றி வழிவாழ
நிஜமாக இனியேனும்
என் இனமே நான் சொல்லக்கேள்!

வானம் இடிக்குமென்று தலைகுனிந்து
தாய்நிலத்தை தனிக்கவிட்டு
ஓடுவதை நிறுத்திவிடு.
வந்ததற்காய் சோறுபோட்டு அடிபோடும்
நாடுகளை துச்சமென துறந்துவிடு.
அஞ்சி அடிபணிந்தும் அண்டிவாழமுடியாத
அழுக்கடைந்த பிச்சைக்கார வேடத்தை
அடியோடு களைந்துவிடு.

இனி புறப்படு நீ உன்னுடைய
தமிழீழ மண் நோக்கி
அங்கே தன்மானம் காக்கின்ற
வீரவேடம் உனக்காகக் காத்திருக்கு!




— செ. யோகநாதன்

# தமிழ்நாட்டைச் சுற்றினோம்.

— வீ.ஆர்.வரதராஜா.

*இன்னுயிர்த் தமிழீழம்*
*தன்னேரிலாத் தமிழ்*
*இருந்தநாடு!*
*முன்முதல் முளைகொண்ட*
*தமிழினம் மூச்சோடு*
*வாழ்ந்த நாடு!*
*தென்னாடெனும் தமிழ்*
*நாட்டுக்குத் தென்னாடு*
*குமரிநாடு!*
*பன்னூறாயிர மாண்டு*
*மண்ணாண்டு வரலாறு*
*படைத்த நாடு!*
(கவிஞர் காசி ஆனந்தன்)

(கடந்த இதழ்களில்.......
வரலாறுபடைத்த கன்னியா குமரியைவிட்டுப் பிரிய மனமின்றி,அங்கிருந்து கொடைக்கானல் வந்து சேர்ந்தோம்.இக்கட்டுரை நேரடிக்குறிப்புக்கள் எதும் எடுக்காமல் நினைவில் நின்ற நிகழ்வுகளின் அடிப்படையில் எழுதப்படுகின்றது.இந்த இதழில் கொடைக்கானல் குளு குளு குளிரில் நனைந்த அனுபவம் தொடர்கின்றது...)

வாழ்வில் முன்னேற விரும்பினால் முதலில் மனதில் உறுதிவேண்டும்.
மனதில் உறுதி ஏற்படவேண்டுமானால் சிந்தனையில் தெளிவுவேண்டும்.
சிந்தனையில் தெளிவு ஏற்படவேண்டுமாயின் அமைதி தேவை.
அமைதி ஏற்படவேண்டுமாயின் சுற்றம் சூழல் பசுமை நிறைந்ததாக இருக்க வேண்டும்.
அந்தத் தனித்துவமான பசுமை கொடைக்கானலில் கூடை கூடையாக எடுக்கக்கூடிய அளவு நிரம்பிக்கிடக்கின்றன.
சென்னையிலுள்ள சூழ்நிலையை நினைத்தால் தலைசுற்றும்.அங்கு சூழலில் பசுமையான அமைதியில்லை.
ஆனால் கொடைக்கனலில் அதற்கு முற்றிலும் வித்தியாசமான சூழ்நிலை.

நாங்கள் அங்கு சென்ற முதல்நாள் வெளியில் எங்கும் போகவில்லை.
ஏனெனில் அத்தினம் தமிழ்நாடு முழுவதும் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
காவிரியாறு நீர்ப்பிரச்சினையில் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க தமிழ்நாடு அரசு முன்னின்று இதனை நடாத்தியது.
இருப்பினும் அன்று மாலை சிறிது தூரம் நடந்து சென்றுவிட்டுத்திரும்பினோம்.
சூழ்நிலைமாற்றம் உடம்பில் சோர்வை ஏற்படுத்தியிருந்தது.சென்னைமுதல் கன்னியாகுமரிவரை வெய்யிலின் கோரம் உடம்பைத் தாக்கியிருந்தது.
ஆனால் கொடைக்கானல் குளிர் அதனைச் சாந்தப்படுத்தியது.
அடுத்தநாள் காலை உணவு அருந்திவிட்டு கொடைக்கானலைச் சுற்றிப் பார்க்கப் புறப்படத்திட்டமிட்டோம்.
அங்கு எவ்வளவு நாட்கள் தங்குவது என்ற பிரச்சினை எழுந்தது.
முதல் எங்கள் திட்டப்படி கொடைக்கானலில் இருந்து மைசூர் செல்லவேண்டும்.
அங்கு மன்னர்கள் ஆண்ட மாளிகைகள் உட்பட பல சரித்திர சான்றுகள் உள்ளன.இந்தியாவுக்குச்செல்லும் உல்லாசப்பிரயாணிகள் மைசூருக்குப் போகாமல் வருவதில்லை.அத்தோடு அங்கு புட்டபர்த்தியில் சாயிபாபா ஆத்மீகப்பணிபுரிந்துகொண்டிருக்கிறார்.
ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினசரி அங்கு அவரின் தரிசனத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்.
இரண்டு நாட்கள் கொடைக்கானலில் தங்கியிருந்துவிட்டு மைசூருக்குச் செல்லலாம் எனத்திட்டமிட்டிருந்தோம்.
ஆனால் எங்களுக்குச் சிறிது ஒய்வு தேவைப்பட்டது.அதனால் கொடைக்கானலில் நான்குநாட்கள் தங்கினால் நல்லது என பிள்ளைகள் அபிப்பிராயப்பட்டனர்.
அதேநேரத்தில் நான்காவதுநாள் நாங்கள் திருச்சி விமான நிலையத்துக்குப் போகவேண்டும்.
ஏனெனில் எங்கள் உடன்பிறப்புக்கள் அத்தினம் அங்குவருவதாகத்திட்டம்.
அவர்களை வரவேற்க நாங்கள் அங்கே தயாராக நிற்கவேண்டும்.
எங்கள் இந்தியப் பிரயாணத்தின் முக்கியநோக்கங்களுள் அதுவும் ஒன்று.
சிலவருடங்களாக சந்திக்காமல் இருந்த உறவுகளை நேரில் காண்பது மகிழ்ச்சிக்குரிய விடயமல்லவா?
எனவே இக்காரணங்களினால் மைசூர் பிரயாணத்தை நாம் தவிர்த்துவிட்டோம்
அங்கு சென்றிருந்தால் மைசூர் மன்னர்களின் மாட மாளிகைகள்பற்றியும் அவர்களின் வீரவரலாறுகள் பற்றியும் அறிந்து இக்கட்டுரையில் சேர்த்திருக்கலாம்.
உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கானோரின் வணக்கத்துக்குரித்தான சாயிபாபா குறித்தும் அவர் நடாத்தும் தர்மநிலையங்கள் குறித்தும் அவற்றின் பயன் பற்றியும் விபரங்களை நேரில் அறிந்திருக்கலாம்.
உடலில் ஏற்பட்ட சோர்வினால் பிரயாணக் கலகலப்பு எங்களில் சற்றுக் குறைவாக இருந்தது.
இதற்கிடையே ஊட்டிக்குச்செல்வதென்றும் முன்பு நாங்கள் திட்டமிட்டிருந்தோம்.
கிட்டத்தட்ட ஊட்டியும் கொடைக்கானலும் ஒரேமாதிரியான சூழல் என்பதால் அதனையும் தவிர்த்துவிட்டோம்.
எனவே நான்குநாட்கள் கொடைக்கனலில் ஓய்வு எடுப்பதென முடிவெடுத்தோம்.

குளுகுளு குளிர் சற்று இதமாக இருந்தது.அன்று காலை நாங்கள் முதலில் கொடைக்கானல் குறிஞ்சிக்குமரன் ஆலயத்துக்குச்சென்றோம்.
அந்த ஆலயமும் சிறிய குன்றின்மீது அமைந்திருந்தது.அமைதியான சூழல். பக்தர்கள் மிகமிகக்குறைவு.
அங்கு எப்போதுமே காலைநேரப் பூஜைக்கு பக்தர்கள் குறைவு.
ஏனெனில் காலையில் சற்றுக்குளிர் என்பதனால் அந்நிலையாம்.
ஆனால் குளிர் பிரதேசமொன்றில் இருந்து செல்பவர்களுக்கு அது சாதாரணம்.
குறிஞ்சிக்குமரனை மனமுருகத்தரிசித்தோம்.

வெளியில் வரும்போது அவதானித்தேன். பிச்சையெடுப்பதற்கென ஒரேயொரு பெண்மாத்திரமே இருந்தாள்.
எனக்குச் சற்று ஆச்சரியமாகவே இருந்தது.கோயில்களில் சற்று அதிகமாகவே பிச்சைக்காரர்கள் இருப்பது வழக்கம்.ஆனால்,
''ஏன் நீமட்டும் தனியாக இருக்கிறாய்?'' என்று அந்தப்பெண்ணைக் கேட்டேன்.
''குளிருங்க அதாங்க...!''என்றாள் அந்தப்பெண்.
குறிஞ்சிக்குமரனை அடுத்து நாங்கள் கொடைக்கனலில் புகழ்பெற்ற செட்டியார் பூங்காவுக்குச் சென்றோம்.
பல தமிழ் சினிமாப் படங்களில் காதல் காட்சிகள் இப்பூங்காவில் இடம்பெற்றுள்ளன.
சினிமாப்படம் எடுக்கும் விதத்தில் சற்று அழகாகவே அது அமைந்திருந்தது.
பல வர்ணங்களில் பூக்கள் பூத்திருந்தன.
வர்ண மலர்களில் மனத்தைப் பறிகொடுக்காதவர்கள் உலகில் யார் இருக்கிறார்கள்? அந்த மலர்களைப்பறிக்க மனம் துடிக்கும்.ஆனால்,
''பூக்களைப்பறிக்காதீர்கள்'' என்ற அறிவித்தல் அதனைத்தடுத்துவிடும்.
மலர்களையே நினைத்தவாறு மலையேறத்துவங்கினோம்.
வாகனம் மெதுவாக ஊர்ந்தவாறு வளைந்து நெளிந்து சென்றது.
எமது வாகனத்துக்கு எதிரே ஒரு பஸ் சென்றது.
அதில் கோளத்து இளம் சிட்டுக்கள் செல்வதாக சாரதி கூறினார்.

(அடுத்த இதழில்)

**வைகாசி–ஆனி பூவரசு நிழலினிலே,**
**பிறேமன் தமிழ்க்கலைமன்றத்தின்**
**''உறவுகள்'' கூடுகட்டிக் குடியிருந்தது.**

அழகுக்குள் அழகிருந்து எனை அரவணைத்தது
அன்புக்குள் அன்பிருந்து எனை நெகிழவைத்தது
உறவுகள் அழைத்தெனக்கு விருந்துவைத்தது.
மொத்தத்தில் பூவரசு எனைக் கொள்ளைகொண்டது.

–அன்புடன்,
*சாந்தி நிவாஸ்*
(பிறேமன்)

வண்ணத்துப்பூச்சி
ஐந்தாவது
ஆண்டு மலர்




Zur Essenthoer Muehle 4,
3538 Marsberg 15,
GERMANY.
Tel: 02992/ 5855

# எண்ணம்

சஞ்சிகை ஒன்றை வெளியிடுவது என்பது மிக இலகுவான விடயம் என்றும் பேனாவும் பேப்பரும் இருந்தால் எழுதிவிடலாம்; சஞ்சிகையை அடித்துத்தர ஒரு பொது நிறுவனம் உதவி புரிந்தால் ஒகோ என்று சஞ்சிகை நடத்திவிடலாமென்று சிலர் நினைக்கிறார்கள்.

எழுதுவது இலகுவாக இருக்கலாம். ஆனால் எழுதும் அந்த எழுத்துக்கள் தனது இனத்துக்கு, தான் பிறந்து வளர்ந்த மண்ணுக்கு, தான் வாழும் இவ்வுலகுக்கு நல்லதைப் படைக்கக் கூடியதாகவும், முன்னேற்றப் பாதைகளை உருவாக்க வல்லதாயும் இருக்கவேண்டும். பகுத்தறிவை வளர்த்து மூடக்கொள்கைகளைத் தகர்த்தெறிய வல்லவனாய் அறியாமை இருளில் கிடந்து அதர்மங்கள் செய்வோருக்கு அறிவு ஒளியூட்டித் தர்ம வழி காட்டவல்லவனாய் இருக்கவேண்டும்.

எமக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்பதற்காகவோ அல்லது எம்முடன் கருத்து வேறுபட்டவர்களைத் தாக்கி இகழ்ந்து எழுதவேண்டும் என்பதற்காகவோ நாம் பேனாவை எடுப்போமேயானால், எமது பேனா எழுத்துலகில் எதையும் படைத்துவிடமாட்டாது. மாறாகப் பல்லிழிப்புக்கும், பரிதாபத்துக்கும் உரிய நிலைக்குத் தள்ளப்படும்.

பேனாக்கள் அறிவிலிப் பேய்களை விரட்ட வேண்டுமே தவிர, அவற்றுக்கு உணவூட்டி வளர்க்கக்கூடாது. பிரிவினைகளைப் போக்கவும், சமாதானத்தை உருவாக்கி வழிநடத்தவும் பேனாக்கள் கங்கணங்கட்ட வேண்டும். வறுமையைப் போக்க, அழிவுகளைத் தடுக்க, பண்பாடுகளை வளர்க்க கலையுணர்வுகளைச் செழிக்க வைக்க எமது எழுத்துக்கள் பிறக்கவேண்டும்.

மனதில் சுதந்திரம், எண்ணத்தில் தூய்மை, அறிவில் தெளிவு, செய்கையில் உறுதி என்பன இருந்தால் தான் எமது எழுத்துக்களும் மக்களுக்குச் சுதந்திர உணர்வையும் , தூய்மையையும் , தெளிவையும், உறுதியையும் ஏற்படுத்தவல்லனவாக இருக்கும். இல்லையேல் சொல்லொன்று, செயலொன்றாகிப் பயனற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். இதனை உணர்ந்து அறவழியில் எனது பேனா தொடர்கிறது. ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறது. இந்த எழுத்துக்கள் மக்களின் மனதைத் தொடுமானால் அது நான் செய்த பாக்கியமே. எனக்குத் தெரியாததை நான் எழுதவில்லை. எனக்குத் தெரிந்தவை , என் நெஞ்சில் உதிப்பதை எழுதுகிறேன். நன்மைகள் எனது சமூகத்துக்கும், உலகத்துக்கும் குவிய வேண்டுமென்ற உள்ளத்துடிப்பில் எழுதுகிறேன். இது எனது திறமையல்ல. இந்த ஆற்றலைத் தந்தவன் இறைவன். இதனை வளர்க்கவும், தடுக்கவும் அவனால் முடியுமென்பதை நான் அறிவேன். மனிதனின் இயக்கமும் சரி, உயிர்களின் இயக்கமும் சரி ஏன் இந்த உலகத்தின் இயக்கமே இறைவனின் சக்தியால் ஆளப்படுகிறது. இதனால் மமதை கொள்வது மனிதனுக்கு ஆகாது.

ஒரு சஞ்சிகை நடாத்துபவர் அதற்காகப் பெரும் பொழுதையும், பணத்தையும் செலவிடுகிறாரே தவிர, அதிலிருந்து பணம் பெறமுடியுமென்று நினைப்பது முயற்கொம்பு. இலாபமில்லாமலா இவர்களெல்லாம் சஞ்சிகை வெளியிடுகிறார்கள் என்று சிலர் கதைப்பதும் உண்டு. இலாபம் உண்டு தான், இங்கு ஜேர்மன் வங்கியில் அல்ல; தர்மத்தின் வங்கியில் வரவு வைக்கப்படுகிறது. சஞ்சிகை மட்டுமல்ல எந்தவொரு காரியத்தையும் கடமையுணர்வுடன் இலாபம் கருதாது அடுத்தவருக்குத் தீங்கு விளைவிக்காத விதத்தில் உலக

நன்மை பேசுவதற்குள் தர்மம் பேசும் என்பதை உணர்ந்து தீயதுகளைந்து நல்லது படைப்போம். எமது தாயகத்தின் துயர் துடைக்க எம் பேனாக்களைத் தூக்குவோம். சமாதான உலகைப் படைக்க எழுத்துக்களைக் குவிப்போம். அறியாமைப் பேயை விரட்டப் புத்தகங்களைப் படைப்போமென்று அனைத்து எழுத்தாளர் சகோதரங்களையும் அன்புடன் அரவணைக்கிறது வண்ணத்துப்பூச்சி.



ஐந்தாவது ஆண்டு நிறைவுகாண்கின்ற வண்ணத்துப்பூச்சியை வாழ்த்துகிறோம்.

# நூலைப்போல
# சேலை.

அந்த எலக்ரோனிக் கடிகாரம் அலறிக்கொண்டேயிருந்தது. ஆனால் அவளது தூக்கத்தை அச்சத்தம் எதுவிதத்திலும் இடைஞ்சல் செய்யவில்லை. அவ்வளவு ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள் ரேகா.


''பிள்ளை! எலாம் அடிக்குதல்லை? அவ்வளவு நித்திரையோ?'' –அருகிலிருந்த கடிகாரத்தைவிட அடுத்த அறையிலிருந்து அதட்டிய அம்மாவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தவள், படுத்திருந்தபடியே அவசர அவசரமாக அதைநிறுத்தக் கையெடுக்க அது கீழே விழுந்துவிட்டது.

''சரியே? மணிக்கூடு சரியே? வரவர உனக்கு வேண்டாப்புக் கூடிப்போச்சடி! அப்பிடி என்னடி வெட்டிப்புடுங்கினனி இவ்வளவு அலுப்படிக்க? சரி சரி கெதியா எழும்பி முகம் கழுவிப்போட்டு வெளிக்கிடு! சூலைக்கு நேரமாச்சு!''

நேற்று நீச்சல் குளத்தில் நெடுநேரம் நீச்சல் அடித்ததுதான் இந்த அலுப்புக்குக்காரணம் என்று எப்படி அவள் அம்மாவுக்குச் சொல்வாள்? குற்ற உணர்வுடன் கூனிக்குறுகி மெதுவாக நடந்து குளியலறைக்குச் சென்றவள் கதவைத் தாழ்ப்பாள்போட்டுக்கொண்டதும் அப்படியே சிலைபோலக் கண்களை மூடிக்கொண்டு நின்றாள்.

நேற்று நடந்தவையெல்லாம் அவளையும் மீறி அவள்மனத்துள் புகுந்து இன்பக் கிளுகிளுப்பை ஊட்டிக்கொண்டிருந்தன. அம்மாவுக்குத்தெரியாமல் அவள்செய்த முதல் குற்றம் இதுதான். இதுவரை அவளைக் கண்டாலே அவளுக்குப் பிடிப்பதில்லை. பொதுவாகவே வெள்ளைத்தோல்களுடன் அவள் சேருவதேயில்லை. தானுண்டு தன் படிப்புண்டு என்று மிகவும் அமைதியாக இருக்கும் சுபாவம் அவளுடையது. ஒரேயொரு ஜேர்மானியச்சிறுமி–ஹெல்கா–வுடன்–மட்டும் கலகலப்பாகப் பழகுவாள். மற்ற எவருடனும் பேசவேமாட்டாள். அஃதவ்வாறிருக்க அன்றுமட்டும் நீச்சல் குளத்தில் ஒரேநாளில் அவ்வளவு நெருக்கம் எப்படி ஏற்பட்டது?

எல்லாம் அந்தப் பள்ளித்தோழி ஹெல்காவின் சாகசம்தான். இவளையும் எல்லோரையும்போலக் கலகலப்பாக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அவ [illegible] ஆசிய [illegible] கலாச்சாரத்தையும் ஒப்பிட்டுப்பேசி ஆசிய கலாச்சாரம் மூடத்தனமானது என்று பரிகாசம் செய்ததன்மூலம் இதை ஒரு மானப்பிரச்சினையாக்கி அவளைச் சம்மதிக்கவைத்துவிட்டாள் ஹெல்கா. தொலைக்காட்சியில் தினமும் அவள்பார்க்கும் முத்தக்காட்சியில் தானே சம்பந்தப்பட்டதை நினைக்கவே ரேகாவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. திரைப்பட நடிகைகளைப் பாவனை செய்துகொண்டு கண்ணாடியில் தன் முகத்தையே திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தாள். வயதுக்குமீறி வளர்ச்சியடைந்த அங்கங்கள் வயதுக்குமீறிய உயரம். இத்தனையையும்விட துருக்கி இளைஞர்களைப்போல பளிச்சென்ற நிறம். இவையெல்லாம் சேர்ந்து அவள் ஒரு பன்னிரண்டுவயதுச்சிறுமி என்பதை மறைத்து அவளை ஒரு முழுமையான



## மூன்றாவது பரிசுபெற்ற
## சிறுகதை.



பெண்ணாகவே இனங்காட்டிக் கொண்டிருந்தன. அதனாலேயே அவளுடன் கைகோர்த்துக்கொண்டு சுற்றவேண்டும் என்று அவளுடன் படிக்கும் ஜேர்மானியப் பையன்களுக்கெல்லாம் போட்டி. அவர்களில் ஒருவன்தான் அன்று நீச்சல் குளத்தில் ஹெல்காவின் உதவியோடு வென்றுவிட்டான்.

"பிள்ளை..கெதியா முகங்கழுவிப்போட்டு வாவன்! தேத்தண்ணி ஆறவெல்லே போகுது?" அடுப்படியிலிருந்துவந்த அம்மாவின் குரலில் சற்று விடுபட்டுப்போன நினைவுகளை மீண்டும் இழுத்து ஒட்டவைத்துக்கொண்டு மேலும் தலையைத்திருப்பி அழகுபார்த்துக்கொண்டிருந்தாள்.

"உங்கை என்னடி செய்கிறாய்? தண்ணிச்சத்தமே கேக்கேல்லை?" குளியலறையில் கதவில் ஓங்கியடித்தபடி அம்மா போட்ட சத்தத்தில் திடுக்கிட்டு தண்ணீர்க்குழாயைத்திறக்கப்போனவள் தடாலென்று தடுக்கி விழுந்துவிட்டாள். முழங்காலிலிருந்து இரத்தம் இலேசாக கசிந்துகொண்டிருந்தது. அவசர அவசரமாகத் தன் காலைக்கடன்களை ஒப்பேற்றிவிட்டு வந்தவள் இலேசாகச் சூடாறியிருந்த தேனீரை ஒரேமூச்சில் இழுத்துவிட்டு காலைச் சாப்பாட்டையும் வேண்டாவெறுப்பாக முடித்துக்கொண்டு முதுகில் புத்தகப்பையுடன் குதித்தபடியே படியிறங்கிப்போனாள் பள்ளியைநோக்கி. மகள்போகும் அழகையே வாசலில் நின்று கண்கொட்டாமல் பார்த்தபடி நின்றாள் காமினி. ஆமாம்.காமினியின் ஒரேமகள்தான் ரேகா.சுமார் பதினொரு வருடங்களுக்குமுன் ரேகா ஆறுமாதக் குழந்தையாக இருந்தபோது ஜேர்மனிக்கு வந்தவள்தான் காமினி, வாழ்ந்துகாட்டுகிறேன் என்னும் சவாலுடன் புறப்பட்டவள் இன்றுவரை வாழ்ந்துகாட்டியே விட்டாள். இனி எதிர்காலம் அவளின் அன்புமகள் ரேகாவின் போக்கில்தான் தங்கியுள்ளது.

சி.சற்குருநாதன்.

மகளைப்பள்ளிக்கு அனுப்பிவிட்டு பழைய கடிதம் ஒன்றைத் தேடியெடுத்து வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அது ஊரில் அவள் இருந்தபோது அண்ணன் சிவராஜனால் கொழும்பிலிருந்து எழுதப்பட்ட கடிதம். சிவராஜனும் அவளும் ஒருதகப்பன் பிள்ளைகள், ஒருதகப்பன் பிள்ளைகளே தவிர ஒருதாய்வயிற்றுப் பிள்ளைகள் அல்ல. சிவராஜனின் தாய் இறந்தபின் இரண்டாம்தாரமாக வாய்த்தவளின் மகள்தான் காமினி. குடும்பமே பல சிக்கல்கள் நிறைந்த குடும்பம். காமினிக்கு ஏழுவயதுவரை குடும்பத்தில் அவ்வளவு பெரிதாக சிக்கல் ஒன்றும் எழவில்லை. அதன்பின்தான் அந்தப் பெரிய சிக்கலே ஆரம்பமானது. தனியார் கடையொன்றில் வேலைபார்த்துவந்த காமினியின் தந்தை கடை அலுவலாகக்கொழும்பு சென்றால் திரும்ப எப்படியும் ஒருவாரமாவது ஆகும். இந்த இடைவெளியில் காமினியின் தாய்க்கும் இன்னொருவனுக்கும் ஏற்பட்டிருந்த கள்ள உறவு ஒருநாள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு சந்திசிரிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. ஆத்திரமடைந்த காமினியின் தந்தை வீட்டுக்குவருவதையே நிறுத்திக் கொண்டதுமட்டுமின்றி சிவராஜனையும் கொழும்பிலேயே வைத்துப் படிக்கவைத்தார். சிவராஜனுக்குச் சித்தியை அறவே பிடிக்காது. ஆயினும் தங்கை காமினியின்மட்டும் அவன் எல்லையற்ற பாசம்வைத்திருந்தான். அடுத்த ஏழுவருடங்களுக்கு ஒருவர்முகத்தை ஒருவர்பார்க்கவில்லையாயினும் கடிதங்களிலேயே பாசங்களைப் பரிமாறிக்கொண்டனர். தங்கையை நேரில் பார்த்துப்பேசவேண்டும் என்று சிவராஜன் திட்டம் தீட்டிக்கொண்டிருந்த அந்த வேளையில்தான் காமினியைப்பற்றிய அந்தச் செய்தியும் அவன் காதில் விழுந்தது. பள்ளித்தோழிகளோடு துள்ளித்திரியவேண்டிய அந்தப் பதினாலு வயதில் அவள் தாயாகியிருக்கிறாள் என்று கேள்வியுற்றதும் சிவராஜன் கொதித்தெழுந்தான். அதற்குக்காரணமானவனைக் கண்டதுண்டமாக்குவேன் என்று ஆவேசப்பட்டான். ஆனால் அடுத்தநாளே காமினியின் கடிதத்தில் வந்த செய்தி அவனை உறையவைத்தது.

''நான் அவரை மனசாரக் காதலித்தது உண்மைதான். அவர் உயிருடன் இருந்திருந்தால் நிச்சயமாக என்னைத்தான் திருமணம் செய்துகொண்டிருப்பார். ஆனால் எனது விதி.. கள்ளக்கடத்தல்படகொன்றில் செல்லும்போது கடற்படையினால் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார்...'' -அவள் அழுதழுதுதான் அந்தக் கடிதம் எழுதியிருக்கிறாள் என்பதற்கு இடையிடையே அழிந்திருந்த சில எழுத்துக்கள் சான்று பகர்ந்தன.

சித்திதான் இக்கினை வயசுக்குமேலை பேரெடுக்கவெண்டா இவளுக்கு இந்தப் பதினாலு வயதுக்கை அப்பிடி என்ன அவசரம் வந்துது? எங்கடை குடும்பமே இப்பிடியான குடும்பம் எண்டு நாலு சனம் சிரிக்கட்டும் எண்டுதானை? இங்கிலாந்து, அமெரிக்காவிலையே பதினெட்டுவயசுக்குமேலைதான் எதுவும் நினைச்சபடி செய்யுங்கள்...இது...?இதை என்னெண்டு சொல்லுறது? அது அவளிலை பிழையில்லை; தாயைப்போலதானே பிள்ளையும் இருக்கும். -தனிமையில் இருந்து பொருமிக்கொண்டிருந்தான் சிவராஜன். அப்பாவைப்போலவே எதையும் கண்டுகொள்ளாமல் இருந்துவிடுவது என்று தீர்மானித்து அந்த ஆத்திரத்தில் அவன் எழுதிய கடைசிக்கடிதத்தைத்தான் காமினி அன்று வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தக்கடிதத்தில் இருந்த ஒரு வசனம்தான் அவளின் இந்த வைராக்கியத்துக்குக்காரணமாக அமைந்துவிட்டது.

.....தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை என்பதை நிரூபித்துவிட்டாய்! ...... -இது ஒரு பழமொழிதான் அதையும் அவன் எழுத்துப்பிழையோடு எழுதியிருந்தான். அவளும் அதற்குப்பதிலாக, ...நூலைப்போலை சேலை

அல்லா நாளைப்போல சேலை.இதில் எழுத்துப்பிழை மட்டுமல்ல இந்தபழமொழியே பொய்யென்பதை நிரூபிக்கும் வகையில் என்மகள் ரேகாவை வளர்த்து ஆளாக்குகிறேனா இல்லையா பார். என்று பதிலுக்குச் சவால்கடிதம் அனுப்பிவிட்டு அதை நிறவேற்றும் மார்க்கம் தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தாள். இந்த லட்சணத்தில் காமினியின் தாயும் மறுமணம்செய்துகொண்டு தனிக்குடித்தனம் போய்விட்டாள். காமினிபாடு திண்டாட்டமாகப்போய்விட்டது. இருந்த ஒரே ஆதரவு தாய்தான்.அதையும் இழந்தபிறகு அவள் யாரின் உதவியோடு அக்குழந்தையை வளர்த்தெடுப்பாள்? அரைவயிறு கால்வயிறோடு குழந்தைபிறந்து ஆறுமாதமாகியும் அண்ணனிடமிருந்து எதுவித கடிதமோ வாழ்த்துச்செய்தியோ இல்லை. அவளுக்கும் அண்ணனைவிட்டால் இப்போது யாரும் ஆதரவு தரமாட்டார்கள். பசிவந்திடப் பத்தும் பறந்திடுமல்லவா? அந்தப்பத்தில் ஒன்றாக ரோஷமும் பறக்க அண்ணனைத்தேடிப்புறப்பட்டாள் தங்கை.அவனை நேரில் கண்டு தன் நிலையைச்சொல்லி அழுதால் அவன் மனம் மாறக்கூடும் என்ற எதிர்பார்ப்புடன் ஆறுமாதக்குழந்தை ரேகாவுடன் அவள் கொழும்புநோக்கிப் பயணமானாள்.அங்கு அவளுக்குப் பேரிடியொன்று காத்திருந்தது. பெருங்கஷ்டப்பட்டு அண்ணனின் விலாசம் தேடிப்பிடித்துப் போய்க் கதவைத்தட்டினால் அங்கு வேறொரு வாலிபன் நின்றிருந்தான். தன் பெயர் ரகுவரன் என்றும்,இந்த அறையில் சிவராஜனுடன் தான் தங்கியிருப்பதாகவும் தன்னை அறிமுகம் செய்துகொண்ட அந்த இளைஞன் சிவராஜன் வெளியே சென்றிருப்பதாகக்கூறி அவளை அவன் வரும்வரை விரும்பினால் உள்ளேவந்து காத்திருக்குமாறு அழைத்தான். ரகுவரனின் தோற்றம் ஃவன் பார்வை அவளுக்குக்கொஞ்சமும் பிடிக்கவில்லை.

"சரியான வில்லன் மூஞ்சி!" -மூன்றுமுடிச்சு திரப்படத்தில் ஸ்ரீதேவி கூறிய வசனம்தான் அவளுக்கு ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் அவனை நம்புவதைத்தவிர வேறுவழி இருக்கவில்லை அவளுக்கு. "சரி மூக்குக்குமேலை போட்டுதாம்!முழம்போனாலென்ன சாண்போனாலென்ன.. ஏதோ விதிப்படி நடக்கட்டும்!" தனது சவாலை விதியிடம் பாரம் கொடுத்துவிட்டு அறையினுள் நுழைந்தாள்! அறையில் இரு கட்டில்கள் காட்சியளித்தன. "இதுதான் உங்கடை அண்ணையின்ரை கட்டில்.குழந்தையை அதிலை கிடத்திப்போட்டு இருங்கோ,நான் உங்களுக்கு ரீ போட்டுக்கொண்டுவாறன்!" -அவன் பேச்சில் குழைவுதொனித்தது.முரடன்போலத் தோற்றமளித்தாலும் ரகுவரனின் மென்மையானபேச்சு அவள்மனதிற்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. அதுமட்டுமல்லாமல் அறியாப்பிராயத்தில் தான் செய்த சிறுதவறுக்காக தன்னை அறவே வெறுத்து ஒதுக்கிய அண்ணனை இவனுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் செய்தாள்.

"சே! எவ்வளவு நல்ல பெடியன்போலக்கிடக்கு!" அவள் இருந்த நிலைமையில் யாரையாவது நம்பித்தான் ஆகவேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டாள். இரவு வெகுநேரமாகியும் இன்னும் அண்ணனைக் காணோம். என்ன செய்வதென்று தெரியாமல் எங்கோ பார்த்தபடி ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தாள். "ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெண்கள் தாம் நினைத்தபடி வாழலாம். அங்கெல்லாம் அவர்களுக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஏட்டளவிலும் மேடைப்பேச்சிலும்தான்.அதை நடைமுறைப்படுத்த ஏன் தயங்குகிறார்கள்?" -தமிழ்ச்சமூகம் என்னும் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்துகொண்டிருந்தது அவள் மனம். அதாவது திருமணம் செய்துகொள்ளாமலே இன்னொரு குழந்தையைப் பெற்றுக்கொள்வதற்குரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துக்கொண்டிருந்தாள். "சிவாவை இன்னும் காணேல்லை!நான்

போய்ப்பாத்துக்கொண்டுவாறன்; நீங்க உதிலை படுக்கிறதெண்டாப் படுங்கோவன்!'' சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமலே வெளியேறினான் ரகு. குழந்தை அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தது. அவளுக்கும் பிரயாணக்களைப்பு. தூங்கவேண்டும்போலிருந்தது. குழந்தையை அணைத்தபடி அயர்ந்து தூங்கிவிட்டாள்.

விடிந்து வெகுநேரமாகிவிட்டிருந்தது. ரகு இன்னும் ஆழ்ந்த உறக்கத்திலேயே இருந்தான். அவன் எத்தனைமணிக்கு வந்துபடுத்தான் என்பதே அவளுக்குத் தெரியாது. ''பாவம் எங்கையெல்லாம் தேடியலைஞ்சாரோ?'' —ரகுவில் அனுதாபமும் அதேவேளை அன்னையில் ஆத்திரமுமாக வந்தது அவளுக்கு. ''இண்டைக்கெண்டு எங்கை போய்த்துலைஞ்சார்?'' —வாயாரத்திட்டிக்கொண்டாள். அரைமணிநேரத்தில் குழந்தையின் அலுவல்களெல்லாம் பார்த்துமுடித்து ரகுவுக்கும் தனக்குமாக தேனீரும் தயாரித்துவிட்டாள்.ரகுவின் தேனீரை மேசைமீது வைத்துவிட்டு குழந்தையின் அருகிலேயே கட்டிலில் இருந்து தனது தேனீரை அருந்த ஆரம்பித்தாள். அப்போதுதான் விழித்துக்கொண்ட ரகு அவளைப்பார்த்துப் புன்சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு எழுந்துபோய்த் தனது காலைக்கடன்களை முடித்துவிட்டு வந்து தனது தேனீரைக் கையிலெடுத்தபடி பேசத்தொடங்கினான். ''காமினி!'' —பல நாள் பழகியவனைப்போல அவளைப்பெயரிட்டு அழைத்து ஆரம்பித்தான்.. ''நான் இப்ப சொல்லப்போறதைக்கேட்டுத் தயவுசெய்து சத்தம் போடாதையுங்கோ... பக்கத்து ரூம்காரர் என்ன ஏதெண்டு வந்திடுவினம் இஞ்சை!'' —இதைச்சொல்லிவிட்டு அவள் முகத்தையே உற்றுநோக்கியபடி சிறிதுநேரம் இருந்தான். அவளும் அவன் என்ன சொல்லப்போகிறானோ என எதிர்பார்த்தபடி அவன் வாயையே வைத்த கண்வாங்காமல் பார்த்தபடி இருந்தாள்.

''உங்கடை அன்னையை போனகிழமை ஆரோ அஞ்சாங்குறுக்குச் சந்தியிலைவைச்சுக் கடத்திக்கொண்டுபோயிற்றாங்கள்.இப்ப எங்கை எண்டே தெரியாது.வந்த உடனை என்னெண்டு இதைச்சொல்லிறதெண்டுதான் நான் சொல்லேல்லை!'' —அவளுக்கு இதை எப்படி நம்புவது என்று தெரியவில்லை.தனது தலை தன்னை விட்டுப்போய்ச்சுற்றிவருவதைப்போன்ற பிரமை அவளுக்கு. தன்னையும் மீறி வீரிட்டு அழுதாள்.கட்டிலில் இருந்தபடியே பக்கவாட்டில் சரிந்து தலையணையில் முகம்புதைத்து அழுதுகொண்டிருந்தாள்.

''காமினி சத்தம் போடாதையுங்கோ...பக்கத்து ரூம்காரர் என்ன நினைப்பினம்?'' —அருகில்வந்து அவள்முதுகில் தொட்டு உலுக்கியபடி சொன்னான் ரகு. சடுதியாக அவள் அழுகையை நிறுத்தவேண்டி ஆபத்துக்குப் பாவமில்லை என்றுதான் அவன்.அவள்முதுகில் கையை வைத்திருக்கவேண்டும்.ஆனால் அவளைப்பொறுத்தவரை அது ஒரு பெரிய விடயமே அல்ல.அவளுக்கு ஏதாவது ஒன்று நடந்தால் ஏனென்று கேட்பதற்கே ஆளில்லாதநிலையில் இதுவா பெரிய விடயம் என்று பேசாமல் இருந்துவிட்டாள்.அதுமட்டுமல்லாமல் அவள்மனம் பட்ட வேதனைக்கு அப்படி ஒரு அரவணைப்புத் தேவைப்பட்டது போலிருந்தது அவளுக்கு. அந்தநிலையிலும் தன் குழந்தைக்காகத் தான் வாழ்ந்தே தீரவேண்டும் என அவள் ஆழ்மனம் குரல்கொடுத்துக்கொண்டேயிருந்தது. எதிர்ப்பில்லாத அந்த நிலையைக்கண்ட ரகுவும் வைத்த கையை எடுக்க மனமில்லாமல்,வீணையொன்றை மீட்டும் பாவனையில் விரல்களால் அழுத்தம் கொடுத்துக்கொண்டிருந்தான். நேரம் ஆக ஆக தொடுகை தடவலாகி தடவல் பிடியாகி பிடி சங்கமத்தில் போய்நின்றது. நிலவின் மறுபக்கத்தை நிர்மலமான

முகத்துடன் குழந்தை பார்த்துக்கொண்டிருந்தது. அந்த வாயில்லா ஜீவனை...பச்சைமண்ணை சாட்சியாகவைத்து கந்தர்வ மணமொன்று அங்கு அரங்கேறியது. தனக்கு அப்பாகிடைத்த சந்தோஷத்தில் குழந்தை சிரித்துக்கொண்டிருந்தது. கொஞ்சநேரத்தில் நிலைமைக்குத்திரும்பிய இருவரும் ஒருவர்முகத்தை ஒருவர் பார்க்கவே சங்கடப்பட்டனர்.சிலநிமிட அமைதியின்பின் அவன்தான் பேசத் தொடங்கினான்.

''காமினி என்னை உங்களுக்கு முன்பின் தெரியாது.எண்டாலும் இவ்வளவுதூரம் போயிற்றம்.ஆனா ஒண்டுமட்டும் சொல்லிறன்:ஒரு பொம்பிளையைத் தொட்டுப்போட்டு விடுற பழக்கம்மட்டும் எனக்குக் கிடையாது!''

''பழக்கம் எண்டா? இதுக்கும் முந்தியும் பல அனுபவம் இருக்கோ?'' –அவள்மனம் கேட்க நினைத்தது.ஆனால் அவள் கேட்கவில்லை.அவனைப்பொறுத்தவரை அந்த ஆராய்ச்சியே அவசியமில்லாத ஒன்றாகப்பட்டது:அவன் தன்னைத் திருமணம் செய்துகொண்டால் அது தனது அதிர்ஷ்டம்.அல்லது ஆயிரத்திலொன்று.இந்த மன நிலையோடு எதுவும் சலனமற்ற முகத்துடன் குழந்தையைத் தடவிக்கொண்டிருந்தாள். அவனே மேலும் தொடர்ந்தான்...

''உங்களுக்குப் பிரச்சினையில்லையெண்டா நான் உங்களைக் கல்யாணம் செய்யிறன்'' அவள் எதுவும் பேசவில்லை.முகத்தில் மட்டும் சிறிது நிம்மதி தெரிந்தது.

''மற்ற ஆம்பிளையள்மாதிரி என்னை நினையாதையுங்கோ.இப்பிடியொரு பொம்பிளைக்கு வாழ்க்கை குடுக்கவேணும் எண்டதுதான் என்ரை இலட்சியம்.இஞ்சை உங்களைச் சந்திச்சது தற்செயலா எண்டாலும் என்ரை வாழ்க்கை இதுதான் எண்டு எப்பவோ முடிவு கட்டீற்றன். எனக்கு உங்கடை குடும்ப விஷயம் எல்லாம் தெரியும்.சிவாவோடை உங்களுக்காக எத்தினைநாள் வாதாடியிருப்பன் தெரியுமே?எங்கடை சனம் திருந்தவே திருந்தாது காமினி. சின்ன விஷயங்களையெல்லாம் பெரிசாக்கி கண்ணகி சீதை எண்டு புராணம் படிச்சுக்கொண்டிருக்குங்கள்.உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமே காமினி?..நான்...'' –தன்னைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான் அவன் இப்படி அதிகப்பிரசங்கித் தனமாகப்பேசுகிறான் என்பதைப்புரிந்துகொண்ட காமினி அவனை மேலும்

பேசவிடாமல்செய்ய தான் ஏதாவது பேசியே ஆகவேண்டும் என்பதற்காக வாயில்வந்ததைச் சொல்லிவைத்தாள். ''இப்ப நான் இருக்கிற நிலைமையிலை என்னத்தைச்சொல்லப்போறன்? இப்ப நீங்கள் எனக்குத்தெய்வம் மாதிரி...''

''அதுகும்சரிதான். புருஷன் எண்டாத் தெய்வம் எண்டுதானை சொல்லுறவை'' அவள் –ஏதோசொல்லவேண்டும் என்பதற்காகச்சொல்ல,அவன் அதிகம் உணர்ச்சிவசப்பட்டு தனது புரட்சிவாதத்தையே மறந்து பேசினான்.அவளின் முகமாற்றத்தில் அதைப்புரிந்துகொண்டவன் நிலைமையைச்சுதாரித்துக்கொண்டு,

''காமினி இனி நாங்கள் இஞ்சை இருந்தா எங்கடை சனம் எங்களை வாழவிடாது! எனக்குத் தெரிஞ்ச இடம் ஒண்டிலை கொஞ்சக்காசு மாறிக்கொண்டுவாறன். ஜேர்மனிக்குப் போவமே?'' –பெரிய பெரிய வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்ட அந்தத் தற்காலிகக்குடும்பம் நிரந்தரமாக நாட்டைவிட்டு வெளியேறி ஜெர்மனியில் தஞ்சம் புகுந்தது. ஜெர்மனியில்வந்து

குடியேறி சுமார் ஆறுமாதங்கள்வரை ரகு காமினி குடும்பத்தில் எதுவித பிரச்சினையும் இல்லாமல்தான் இருந்தது.அதன்பின்தான் காமினியின் விழி ரகுவின் மனைவியின் உருவில் ஜெர்மனிக்கு வந்துசேர்ந்தது. ஆமாம் ரகு ஏற்கனவே திருமணம்செய்து ஒரு குழந்தைக்கும் தந்தையானவன். அடடா!இதிலும் ஏமாற்றம்தானா?அவன்மனைவி வரும்வரை அவனுக்கு நான் விருந்தாகியதுதான் மிச்சமா?ரகு.பெண்சுதந்திரம்பற்றிப் பொரிந்து தள்ளியதெல்லாம்...? ஓகோ!நினைத்தபோது எல்லாம் பாலியல் இன்பத்தைத் தங்குதடையில்லாமல் அனுபவிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த வெறும் புரட்சிவாதிகள் பெண்சுதந்திரம்பற்றிப் பேசுகிறார்களோ? ஒவ்வொருபெண்ணும் ஒவ்வொரு ஆணிடம் அடிமைப்பட்டுப்போனால் இந்தப் புரட்சிவாதிகளுக்கெல்லாம் பலபெண்களுடன் சல்லாபம் செய்வது கஷ்டமாகிவிடுமல்லவா? இவர்களின் துரோகச்சிந்தனைகளையெல்லாம் ஒருநாவலடிவில் வெளியிட்டு இவர்களது முகத்திரையைக் கிழிக்கவேண்டும். புத்தகம் எழுதும் பாவனையிலேயே மனதுக்குள் திட்டினாள் காமினி.இனி ரகுவின் முகத்திலேயே விழிப்பதில்லையென்ற சபதத்துடன் ஜெர்மனியிலேயே வெகு தொலைவிலுள்ள நகரம் ஒன்றிற்கு மாறிவிட்டாள். தனது மகளையாவது நாலுபேர்மதிக்க வளர்த்தெடுக்கவேண்டும் என்பதுதான் அவள்வாழ்வின் ஒரேயொரு இலட்சியம். ஆனால் ரேகா? நூலைப்போலவே சேலையா? நூலைப்போல சேலையா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# புதுக்கவிதை

இடம் மாறிச்சொற்கள்
எங்கெங்கோ தனித்திருக்க
முடமாக்கி முடிக்கின்ற வரிகள்
இதற்கு இட்ட பெயர் இன்று-
புதுக்கவிதை!

இரவல் மொழிகலந்து
ஈரடியும் நாலடியும் மறந்து
போரடிக்கப் புனைவதெல்லாம்
புதுக்கவிதை யாகுமோ?
வாரடித்த வெள்ளம்
வாய்க்கால் வழியோடி
மடைதிறந்தாற்போலே
தடையின்றித் தமிழ்ச்சொற்கள்
தாளமுடன் வந்து
கூடவரும் பொருள் நயத்தை
கோடிட்டு உணர்த்தும்
பாடலது ஒன்று போதும்
பல்லாண்டு வாழும்தமிழ்!

வாளோடும் வில்லோடும்
வளர்ந்தபிள்ளை
போராட்டம் இதற்கொன்றும்
புதுமை இல்லை
[illegible]
தண்ணொளி வீசும்
பூவோடு உறவாடும்
இன்பம் கொண்டு
புதுக்கவிதைப்பெண்ணணங்கே
பொலிவோடு வாராயோ
நாளேடு பத்திரிகையில் நாளும்
நறுமணத்தைத்தாராயோ?

— ப. இராஜகாந்தன்.

# ஓவியர் சேகர் சொல்கிறார்;

... யாழ்ப்பாணத்தில் நான் வாழ்ந்த காலங்களில் 'ஈழநாடு' பத்திரிகையில் ரமணி, லங்கா போன்ற ஓவியர்களின் படங் களைப் பார்த்துவிட்டு அப்பத்திரிகையில் என் ஓவியங்கள் வெளிவராதா என்று நான் ஏங்கியதுண்டு. எனது, அந்த ஏக்கத்தை 'பாரிஸ் ஈழநாடு' தீர்த்து வைத்தது. இன்று ஐரோப் பாவில் வெளிவரும் பல சஞ்சிகைகள் என் படங்களை வெளி யிட்டு வருகின்றன.. இவை யாவற்றிற்கும் எனது நன்றிகள்.

என் வாழ்நாளில் அண்ணன் ஸ்ரீபதி அவர்களின் நட்பு எனக் குக் கிடைத்தது நான் பெற்ற பாக்கியங்களில் ஒன்று. ஈழத்துக் கலைகளையும் - கலைஞர்களையும் மதிக்கின்ற அவரது நல் இதயத்தினால் உதவியினால் நான் ஒரு ஓவியனாக உங்க ளுக்கு அறிமுகமாக முடிந்தது. எப்போதும் எனக்கு உதவ முன்நிற்கும் அவரது அரிய முயற்சியாலேயே இந்நூல் இன்று வெளிவருகிறது.




இன்று ஐரோப்பாவில் வெளிவரும் பல சஞ்சிகைகளில் நல்ல ஓவியங்களைக் காண முடிவதில்லை. சிலவேளைகளில் நல்ல சிறுகதைகளுக்கு வரையப்படுகின்ற ஓவியங்கள் கதை யின் கருப்பொருளையே வித்தியாசமாகக் காட்டிவிடுகிறது. உதாரணமாய், கதையில் நல்ல அழகானவளாக சித்தரிக்கப் படுகின்ற கதாபாத்திரத்தை ஓவியத்தில் அவலட்சணமாக காட்டுவதாக அமைந்த படங்களை காண முடிந்தது.

இதனாலேயே நான் வரைந்த ஓவியங்களை நூலாக வெளி யிடுவதன் மூலம் ஐரோப்பிய தமிழ் சஞ்சிகையாளர்களுக்கு உதவவேண்டும் என்று விரும்பினேன். தமது தேவைக்கேற்ப ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகையாளர்கள் இதிலுள்ள படங்களை பயன்படுத்தலாம்.

இன்று ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகையாளர்கள் பெரும்பாலா னோர் கணணி மூலமே அவற்றை தயாரித்து வருகின்றனர். எனவே அவர்களுக்கு உதவும் வகையில் இந்த நூலிலுள்ள படங்களை கணனியில் பயன்படுத்துவதற்காக DISC குகளி லும் பதிவு செய்து வெளியிட்டுள்ளேன். எனது இந்த பணிக்கு உதவியவர் கணனி விஞ்ஞானத்துறையில் பாண்டித்தியம் பெற்ற திரு. விக்ரமன் அவர்கள். தமது பல்வேறு வேலைப்ப ளுக்களுக்கு மத்தியிலும் அதனைச் செய்து தந்த திரு. விக்ர மன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

**இந்த நூலுக்கு அணிசேர்க்கும் வகையில் அதற்கு மதிப்புரை வழங்கிய "பாரிஸ் ஈழநாடு" ஆசிரியர் அவர்களுக்கும் வாழ்த் துரை வழங்கிய " தமிழன் " முன்னாள் ஆசிரியர் திரு. ஈ.கே. ராஜகோபால், "தமிழருவி" ஆசிரியர் நயினை விஜயன் அவர் களுக்கும் எனது நன்றிகள்.**



SEGAR ARTS
PFINGSTBRUNNENSTR. 31
6000 FRANKFURT 90
GERMANY
Tel: 069/704439

uisburg
ate:- 20.03.1993

# மண்

கலை, இலக்கிய, சமூக மாத இதழ்

V. Sivarajah
Angertalarstr. 98
4100 Duisburg - 28
Germany
Tel. 0203-706480

" MANN " (ERDE) Tamilisches Magazin für Kultur, Literatur und Soziales

## அன்பான வேண்டுகோள்

அன்புள்ளங்களே. . . . . .

தமிழர்களாகிய நாம் சொந்த மண்ணில் அகதிகளாக்கப்பட்டு இன்று உலகின் பல திசைகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் ஏதோ ஒரு வகையில் உண்டு, உடுத்து, உறங்கி, பாதுகாப்பாகவும், அமைதியாகவும் வாழ்ந்து வரும் வேளையில் எமது சொந்த நாட்டையும் ஒருகணம் திரும்பிப் பார்ப்போம். தொடரும் போரினால் எமது உடன்பிறப்புகள் உயிரிழந்து உடமை இழந்து உறங்க இடமின்றி காடுகளிலும் அகதிமுகாம்களிலும் அவல வாழ்க்கை தொடரும் வேளை நாட்டில் பசி, பட்டினி, மருந்து கட்டுப்பாடு அதிகரித்து வருவதாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் நடந்த, நடக்கின்ற கலவரங்களால் தாய், தந்தையர், உற்றார் உறவினரை இழந்து அநாதை விடுதிகளில் அல்லலப்பட்டு வரும் நமது சிறார்களுக்கு உதவி புரியும் நோக்கில் "மண்" சஞ்சிகையின் வாசகப் பெருமக்கள் மனமுவந்தளித்த நிதி உதவியால் இலங்கையிலுள்ள தமிழ் பகுதிகளின் அநாதைச் சிறுவர் இல்லங்களுக்கு இன்றுவரை 5500 DM நேரடியாக நாம் அனுப்பி அவர்களிடமிருந்து பற்றுச் சீட்டையும் பெற்றுக் கொண்டோம்.

யாழ்மாவட்டம் 6 அநாதைச் சிறுவர் நிலையங்கள் (6*500) = 3000
கிளிநொச்சிமாவட்டம் 3 அநாதைச் சிறுவர் நிலையங்கள் (3*500) =1500
திருகோணமலை மாவட்டம் 2 அநாதைச் சிறுவர் நிலையங்கள் (2*500) =1000

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்களின் கடிதங்களின் படியும், குறிப்பிட்ட அநாதை இல்லங்களின் கடிதங்களின் படியும் அநாதைச் சிறுவர்களைப் பராமரிக்க போதிய நிதிவசதி இல்லை என்றும், அரச உதவி கிடைப்பது மிகக் குறைவு என்றும், அரசு [illegible] படைத்தவர்களிடமும், வெளிநாடுகளில் வசிப்பவர்களிடமும் அவசர உதவியை எதிர்பார்ப்பதாகவும் பல கடிதங்கள் எம்மை வந்தடைந்த வண்ணமே உள்ளன. எனவே நாட்டின் எமது உடன்பிறப்புகளின் கண்ணீர் வாழ்வை போக்க... ஒரு நாளைக்கு ஒருபிடி சோறாவது உண்டு பசியாற, உயிர் வாழ... வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களின் மனிதாபிமான கடமையாகின்றது. ஒவ்வொருவரும் சிறிது சிந்தித்து உதவுவோமேயானால் நாம் எல்லோரும் புண்ணியம் செய்து சந்தோசமாக வாழலாம். நாமும் ஒரு உதவி செய்கிறோம் என்ற மன நிம்மதியையும் பெறுகிறோம்.

எனவே உங்களால் முடிந்த தொகையை மாதாந்தம் எமது வங்கிக் கணக்கிற்கு அனுப்பிவைப்பீர்களாயின் பெரும் உதவியாக இருக்கும்.
"அள்ளிக் கொடுக்காவிடினும் கிள்ளியாவது சிறிது கொடுப்போம்".
வங்கி விபரம்:-

நன்றியுடன் உங்கள் ஆதரவை நாடும். . . .

VYRAMUTHU-SIVARAJAH
STADTSPARKASSE DUISBURG
KONTO NO. 225000215
BANK ZAHL 35050000

வ. சிவராசா
ஆசிரியர்
( மண் சஞ்சிகை )
DUISBURG GERMANY

## ஐந்தாவது ஆண்டு நிறைவுகாண்கின்ற ஏலையாவை வாழ்த்துகிறோம்!

K.K.Murugathaasan,
Bromberger Str.8,
4200 Oberhausen 11.
Tele:0208/60 76 35




இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பதற்கொப்பவும், சஞ்சிகையொன்று வெளிவரும் சமகாலத்தில், அச்சஞ்சிகைக்கான இனம் சந்திக்கும் பிரச்சனையைக் கருத்தில் கொண்டும் தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்து இந்நாட்டில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள தமிழர்களாகிய நாம் ஏன் இங்கிருக்கிறோம் என்ற காரணத்தையும், இன்னும் தொடர்ந்து நடைபெற்று வரும் எம்மவர்மீதான இலங்கைஅரசால் மேற்கொள்ளப்படும் அழிப்பு முறையினால் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டும், கொல்லப்பட்டும், அங்கவீனர்களாக்கப்பட்டும், உடமைகள் சேதமாக்கப்பட்டமைக்கும் காரணத்தை ஏலையா தனது ஆக்கங்கள் மூலம் கூறிவருகின்றது. எமது, மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, ஆகிய எம்மினத்தை இனங்காட்டும் மொத்த வடிவான தாயக மீட்புப் போரில், எதிர்காலச் சந்ததியினருக்காக, அவர்தம் பாரம்பரிய மண்ணில் சுதந்திரத்துடனும், சுபிட்சத்துடனும், மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும் என்பதற்காக தாயக எம்மக்களும், போராளிகளும் தங்கள் உயிரைத் தியாகம் செய்து நடாத்தும் உரிமைப்போர் அகில உலகமும் ஏற்றுக் கொள்ளும், ஏற்றுக் கொள்ள வேண்டிய எம் வாழ்வுக்கான போராட்டமே என்ற கருத்தையும், தாயகத்தில் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு சமாதானமும், சுபிட்சமும் உருவாக வேண்டும் என்ற கருத்தையும் அன்பாகவும், பண்பாகவும், உறுதியாகவும் சொல்லி வரும் ஏலையா எம்மினத்தில் இருக்கும் அனைத்துப் பிற்போக்குத் தனங்களுக்கு எதிராகவும், ஏற்றதாழ்வுகளுக்கு எதிராகவும், மூட நம்பிக்கைகளுக்கு எதிராகவும் உண்மையான, ஆரோக்கியமான கருத்துக்களை முன் வைத்து வருகின்றது.

– "ஏலையா" ஐந்தாவது ஆண்டுமலரிலிருந்து.

## — இலக்கிய இன்பம்

சங்ககால இலக்கியப் பாடல்களில் தமிழ் மணக்கும்! கருத்தைக்கவரும் கருக்களை நெருக்கமாகக் காணலாம்.புலவர்களின் புலமையை ரசிப்பதற்கு காலம்போதாது.சங்கத்தமிழ்வளர்த்த புலவர்களில் ஒருவர் அம்மூவனார். காதலைக் கவிமணிகளாகப்பொழிவதில் வல்லவர்.அன்பு உள்ளங்களின் நெருக்கத்தையும் உருக்கத்தையும் சுருக்கமாக உரைப்பதும் அவர் கவித்திறமை. சங்கத்தமிழ் இலக்கியமாம் நற்றிணையில் அவர் கவிகள் பல இடம்பெற்றுள்ளன. அதில் சின்னஞ்சிறிய துளியொன்றை உங்கள்முன் வைக்கிறேன்.

இயற்கை எழில் ததும்பும் கடற்கரையில் ஓயாத அலைகளின் ஓசை. அழகான மணற்பரப்பில் அலைகள் வருவதும் போவதுமாக இருந்தன. காவல் மரத்தின் கனியொன்றை அந்த மணற்பரப்பில் உருண்டு வந்தது.இதனை சுழன்றுகொண்டிருந்த வண்டினங்கள் பார்த்துவிட்டன.அந்தப் பழமும் தமது இனம்தான் என அவை தவறாகக்கருதிவிட்டன.இதென்ன மடமைத்தனம். அக்கனியைச் சுற்றிச்சுற்றி வண்டுகள் இசைபாட ஆரம்பித்தன. இதேநேரத்தில் மற்றொரு அதிசயம் நடந்தது. எங்கிருந்தோ விரைந்து வந்தது ஒரு நண்டு. காவல் கனியைநோக்கியே அதன் கவனமும் இருந்தது. ஆனால்,விரைந்த நண்டின் கால்களில் ஒரு வண்டு சிக்கிக்கொண்டது.இனமறியாத குற்றத்தால் விளைந்த கொடுமை இது.

வண்டுகள் கூட்டம் மேலே பறந்தது.அவை அகமும் முகமும் வாட செய்வதறியாது ஓசை எழுப்பின.ஆனால்,அகப்பட்டது வண்டு என்பது நண்டுக்குத்தெரியாது. உணவுக்கு ஒரு கனி கிடைத்ததென்ற மகிழ்ச்சியுடன் அது விரைந்தது.

நண்டின் பிடியில் வண்டு.வண்டு பதறியது.காவல் கனியை இனங்கண்டு கொள்ளாததினால் இக்கட்டில் மாட்டிக்கொண்டேன்.இப்போது உயிரையும் இழக்கப்போகின்றேன். பாவம் வண்டு.அதற்குத்துணை யார்? அதன் உயிரை காப்பாற்றும் வல்லமை யாருக்குண்டு? அதேவேளை— உதவி செய்ய ஓர் உயிர் வந்தது.விரைந்து வந்தது ஒரு நாரை.

---

### சந்தையிலே

*விற்காதே விற்காதே*
*கல்யாணசந்தையிலே*
*மாப்பிள்ளையை விற்காதே*
*ஆடுமாடு விற்பதுபோல்*
*காசுக்காக விற்காதே*
*மேளம் கொட்டிட*
*தாலி கட்டுகிறான்*
*கைபிடிக்க எண்ணியவன்*
*கைமாறிப்போனதனால்*
*கல்லறைக்கு போவதற்கு*
*கயிறுபோடுகிறாள்*
*காசுக்காக*
*ஊர்வலம் நடக்குது இங்கே*
*காரியம்படைக்க*
*ஊர்வலம் நடக்குது அங்கே*
*இரண்டுமே காரினில் போகுது*
*வேடிக்கை போடுறாங்கள்*
*நீதிசொல்லுறாங்கள்*
*காசுக்காக வாழுறாங்க சாமி,*

— மீற்றர் குலம்.

நாரை உருவில் ஓர் ஆபத்பாந்தவன். அதன் கண்களில் நண்டு தட்டுப்பட்டது. வருகின்ற ஆபத்தை நண்டும் உணர்ந்துவிட்டது. நாரையின் பிடியிலிருந்து விடுபட ஓட ஆரம்பித்தது. இக்தச்சந்தர்ப்பத்தில் நண்டின் பிடியிலிருந்து வண்டு விடுபட்டது. ஒருகொடியில் நண்டு விரைக்தோடி மணலினுள் மறைந்துவிட்டது. நாரைமட்டும் தக்க சமயத்தில் வராதிருந்தால்...காவல் தன்னினம் என நம்பிய வண்டின் கதை முடிந்துபோயிருக்கும்.

நண்டின் பிடியிலிருந்து மீண்ட தோழன் என்று வண்டுகள் உற்சாகத்துடன் பாடி மகிழ்ந்தன.

இனம் இனத்தைத்தான் தெளிந்து தெரிதல்வேண்டும். இல்லையேல் மனம் நோகும் துன்பம் துணைவரும்.

தமிழ்ச்சங்கக் கவிஞர் அம்மூவனாரின் அறிவுரையை அறிந்து களிப்புறாதோர் உண்டோ? இயற்கையுடன் கற்பனையை ஓடவிட்டிருக்கிறார். அவரின் பாடல் இதோ:

*"பொங்கு திரை பொருதவார்மணல் அடைகரைப்*
*புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி*
*கிளைசெத்து மொய்த்தும்பி பழம்செத்துப்*
*பல்கால் அலவன் கொண்டகோட்டு அசாந்து*
*கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்*
*இரைதேர் நாரை எய்தி விடுக்கும்."*




பொருள் விளக்கம்:
கிளை செத்து=தமது இனமெனக்கருதி.
அலவன்= நண்டு. அசாந்து=தளர்ந்து.
இமிர்= ஒலி. பூசல்= போர்.
இரைதேர்= இரைதேடுகின்ற.

**வீ.ஆர்.வரதராஜா**

## *உள்ளத்து உணர்வு*

சிந்திக்க மறந்த
மனித உள்ளங்களால்
திக்கற்று நிற்கிறது-எம்
தமிழீழ தேசம்!

ஒற்றுமையின் பலமறிந்து
ஒன்றுபடா உள்ளங்களால்
உருக்குலைந்து கிடக்கிறது-எம்
தமிழீழ தேசம்!



ஆராண்டால் என்னவென்று
அனைவரையும் ஏற்றதனால்
அக்கரையும் இக்கரையும்
அலைமோதும் தமிழர்கூட்டம்!

ஏன் எடுத்தோம் துப்பாக்கி
என்றுணரா உள்ளங்கள்
உண்மைதனை உணர்ந்து
ஓர் அணியில் நின்றுவிட்டால்
ஓர்கொடியில் விடிவு தமிழற்கு!



*வேலணையூர் பொன்னண்ணா.*
(டென்மார்க்)

# நாங்கள் நடக்கும் பாதை!

உலகின் பல்வேறுபட்ட இன மக்களை நாங்கள் இன்று காணுகிறோம்.
ஒவ்வொரு இனமும் மொழியால்,கலாச்சாரத்தால் தன் தன் தனித்துவத்தைப்
பேணுவதில் மிகவும் உறுதியாகவும்-உன்னிப்பாகவும் இருப்பதைக்காணமுடிகிறது.
துரதிர்ஷ்டவசமாக எம்மினத்தை- தமிழினத்தைப்பற்றி எண்ணும்போது
நெஞ்சம் உடைகின்றது.
இன்று நேற்றல்ல வள்ளுவனுக்கு முன்பிருந்தே நம்மினம் மொழியாலும் சரி
கலாசாரத்தாலும் சரி அந்நியத்திற்கு தன்னை இழப்பதில் ஆர்வம்
காட்டிவருவதை நாம் காணமுடிகிறது..ஆனால் இன்றோ-
மிகக்கேவலமாகப் படுவேகமாக தன்னையழிக்கத்துடித்துக்கொண்டிருக்கிறது.
இன்று உலகின் பலதரப்பட்ட அரசியல் கொடூரங்களில் மிக முக்கிய இடத்தை
சிங்கள அடக்குமுறைக்கும்-தமிழ் விடுதலை உணர்வுக்கும் இடையிலான
போராட்டம் பெறுகிறது.
இப்போராட்டச் சாக்கில் தமிழர்கள் இலட்சக்கணக்கில் கடல் கடந்து
புலம் பெயர்ந்துள்ளனர்.
இவர்கள் தாங்கள் நிலைகொண்டுள்ள நாடுகளில் எவ்வகையான வாழ்க்கைப்
பண்புகளைக் கொண்டிருக்கிறார்கள் என்றாராய்ந்தால்-
சுமார் கால்நூற்றாண்டுக்கு முன்புவரை எம் சமூகத்தின் கொடியபண்புகளில்
ஒன்றாக சாதியமைப்பு இருந்துவந்தது.இன்று அவ்வமைப்பு,போராட்ட
முனைப்புக்களால் தகர்த்தெறியப்பட்டுவிட்டது.
ஆயின் அதுவே வேறொருவடிவில்,வெளிநாட்டுவாசிகளாகிய எம்மிடையே
உருவெடுத்துள்ளது.பழையவர்கள்-புதியவர்கள்-காம்ப் ஆட்கள் என்று
பல்வேறு ''சாதிகள்''.கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு,
சான்றாண்மையாளனுக்கு உயர்சமூக மதிப்பு என்பதெல்லாம்போய்,இங்கு
வந்திறங்கிய வருடத்தொகையின் எண்ணிக்கையில் எங்கள் தகுதிகளை
அளவிடுகிறோம்.இவ்வடிப்படையில் குழுக் குழுவாக இணைந்து-
இறுமாப்புக்காட்டி நிற்கின்றோம்.
ஆண்டுக்கணக்கானது,கையிருப்புத்தொகையின் புதிய கணக்கீடாகக்கொண்டு
ஒரு வட்டத்திற்குள் நின்றுகொண்டு மற்றவர்களிடமிருந்து விலகி நடப்பதும்,
ஆண்டில் சாதிகுறைந்தவர் ஒதுங்கிப்போவதும் பண்பாகிவிட்டது.
பழையவர்கள் புதியவர்களின் வீடுகளில் விருந்துக்குக்கூட விலகுவார்கள்.
புதியவர்கள் அவர்களுடைய வீடுகளுக்கு வந்தால் உரிய மதிப்பை
வழங்கத்தயங்கி ஒரு தனித்துவத்தைக்காட்டுகிறார்கள்.
எங்களில் ஒரு சிலர் தமிழைப்படிப்பவர்களை-தமிழ்ப்பண்புகளைக்
கடைப்பிடிப்பவர்களைக் கேலிசெய்கிறோம். வெளிநாட்டுக்குவந்தும் நாகரீகம்
தெரியாத சனங்கள்.மேற்குநாடுகளில் ஐரோப்பிய பண்பாடுகளைக்

மூன்றாவது பரிசுபெற்ற கட்டுரை.

கடைப்பிடிக்கவேண்டும் என்று நாகரீகம் சொல்லிக்கொடுகிறோம்.

திருமண வைபவங்களிலே மணமக்கள் பூதாக்கலம் அணிவதற்குப் பதிலாக,மதுவகைகளை(Sekt.) அருந்தி மணவாழ்வை ஆரம்பிப்பதும், தமிழ்ஷிமாக்கள் எனப்பெயர்சூட்டிக்கொண்டு மேல்நாட்டுப்பாணியில் நடனங்கள் ஆடுவதுமாக இருக்கின்றோம்.

நிர்வாணக்குளியலுக்கான குளங்களுக்கு குடும்பம் குடும்பமாகச் சென்று நீராடி– விளையாடி–கொண்டாடி மகிழ்கின்றோம்.புதியதோ பழையதோ இளந்தலைமுறையினர் நாங்களும் நாகரீகம் கற்றவர்கள் என்பதைக் காட்டிக்கொள்வதற்கு பற்றைக்காடுமாதிரி முடியலங்காரங்களும்– கரிக்குருவிவால்மாதிரி முடிவளர்ப்பும்–டிஸ்கோவும்–யாஸ் இசையுமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.மேல்நாட்டுப்பண்புகளைப் பின்பற்றவேண்டுமென மற்றவர்களை நையாண்டிசெய்கிற நாங்கள் உண்மையான மேல்நாட்டுப் பண்புகளை நாகரீகத்தைப்பின்பற்றுவதில்லை.இந்நாட்டு மக்களிடையே காணப்படுகின்ற நாட்டுப்பற்று–மொழிப்பற்று–சட்டத்திற்குரிய மதிப்பு –மனிதாபிமானம்–ஒழுங்குமுறையிலமைந்த வாழ்க்கை முறைகள் இவற்றை நாம் நினைத்துப்பார்ப்பதுமில்லை.

இந்த உயர் பண்புகளுக்கும் எமக்கும் தொடர்பு அறவே கிடையாது. ஆனால் இந்த நாட்டுமக்கள் வெறுக்கிற–தங்களுக்குள் நுழைந்துவிட்டதற்காக வருந்துகிற வெட்கப்படுகிற சில பண்புகளை.பாலியல் முனைப்புக்களை, வான்முறையற்ற–எய்ட்ஸ் உற்பத்திநோக்கங்களின் உடற்கவர்ச்சிக்கு முதன்மை அளிக்கிற பண்புகளையும்,புகையையும்–குடியையும் அதில் பெண்கள் இணைவதின் இன்பத்தையும்–மேல்நாட்டுப் பண்பெனவும்– தன்னினம் மொழி கலாச்சாரத்தைப் புறக்கணித்தல் நாகரீகம் எனவும் எண்ணுகின்றோம். ஆனால் எங்கள் எல்லோருக்கும் பரதநாட்டியத்தில் உள்ள பற்றுமட்டும் அளவிடமுடியாதது.அதுவும் அத் தெய்வீகக்கலையின் உயிர்த்தன்மையை உணர்ந்தல்ல.இந்தமேல்நாட்டு நாகரீக மாற்றத்துக்கு உறுதுணையாகக் கொள்வதற்காகவே.

தமிழைப்பேசுவது அநாகரீகம் என்று எண்ணுகிறோம்.எங்கள் பிள்ளைகள் தமிழ்பேசுவதை.கற்பதை நாங்கள் விரும்பவில்லை.தமிழைப்படித்தால் டொச்சை விரைவாகப் பயிலமுடியாது என வெளியில் சொல்லிக்கொள்ளுகிறோம். ஆனால் கலைகளைப்பற்றிய அரிச்சுவடிப் பிரக்ஞையே இல்லாத நாங்கள் தமிழ்க்கலை–பரதநாட்டியம் என்று மிக அக்கறையாகவுள்ளோம். பட்டும் படாடோபமும் இந்தியத்தயாரிப்பான சிறுவர் ஆடைகளும் தங்கநகைகளின் சுமைதாங்கிகளாகவும் வாழ்கிறோம்.

நாங்கள் எங்கள் கடந்த காலத்தை மறந்துவிட்டோம்.பணப்புழக்கத்தின் பெருக்கம் மட்டுமே எங்கள் கண்களுக்குத்தெரிவதால் அர்த்தராத்திரியிலே குடைபிடிக்கிறோம்.இனங்களுக்கிடையிலான உரிமைப்போராட்டச் சாக்கில் எந்தநலம் தேடிவந்தோம் என்பதை மறந்துவிட்டோம்.நீண்டநாட்கள் இங்கு தங்கியிருந்தவர்கள் என்பதால் எங்களில் பலருக்கு நிரந்தர வதிவிட அனுமதி கிடைத்தவுடன் நாங்கள் எங்களுக்கு ஏற்படுத்திக்கொண்ட பொழுதுபோக்கு அமைப்புக்களில் தமிழ் என்ற சொல்லை அகற்றிவிட்டோம். இலங்கைத்தமிழர் சங்கங்களை–இலங்கையர் சங்கம்,இலங்கை மக்கள்

சங்கங்களாக மாற்றினோம்.போதாக்குறைக்கு நாங்கள் சிங்களவர்-தமிழர் -முஸ்லிம்கள் என்ற பேதமின்றி ஒற்றுமையாக வாழவேண்டும்.நாங்கள் நாட்டில் பிரிவினையை விரும்பவில்லை என்று பிரச்சாரம் செய்கிறோம். இதன்மூலமும் ஜேர்மன் போட்ட திரந்தா வதிவிட அனுமதிப்பிச்சையை உலகில் பெறமுடியாத மேலதிகத் தகுதிபோல் பாவித்துக்கொண்டு-அடிக்கடி இலங்கை போவதும்,அதன்மூலம் இலங்கைத்தமிழர்களுக்கு சிங்களவர்களால் ஆபத்தில்லை என்கிற உணர்வை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்படுத்தி-புதியவர்கள்--அண்மையில் வந்திறங்கியவர்கள் ஆகிய உண்மையான அகதிகளுக்கு கொள்ளிவைக்கிறோம்.

தமிழ்ப்பத்திரிகைகளிலே சஞ்சிகைகளிலே காணப்படுகின்ற வியாபார நிலையங்களின் விளம்பரங்களில் எல்லாம் 22 காரட்,காஞ்சிபுரம்பட்டு, இலங்கை ஆனைச்சோடா.பாரும்பா பற்றிய அற்புதமான செய்திகளைக்காண்பதில் அதை வளரவைப்பதில் நாங்கள் மிகவும் அக்கறையுடன் உள்ளோம்.ஆனால் தமிழர்கள் படித்துணரவேண்டிய இலக்கிய,வரலாற்று,கலைகள், தமிழ்பற்றிய நூல்கள்பற்றி-எம்மிடம் வந்து வாங்கிப்படித்து இன்புறுங்கள் என்றோர் விளம்பர அழைப்பை நாங்கள் கண்டதுமில்லை.அதில் எங்களுக்கு நாட்டமுமில்லை.நாங்கள் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம் என்பதை இன்னும் உணரவில்லை.அல்லது உணரவிரும்பவில்லை.

எனினும் மிகவிரைவில் புதியநாசிகளால் தாக்கப்படும்போது கட்டாயமாக உணர்வோம் என எண்ணுகிறேன்.

ஆடம்பரத்திற்காக ஆயிரங்களைக்கொட்டுகிற நாங்கள்-அந்தஸ்தை உயர்த்திக்காட்டுவதற்காக,கம்பியூட்டர் விளையாட்டுச்சாமான்களை பிள்ளைகளுக்கு வாங்கிக்கொடுக்கிற நாங்கள்-நம் தாய்நாட்டின் தேவைக்காக -பசியால் கொதிக்கும் வயிறுகளுக்காக-மருந்தின்றி உயிர்நீக்கும்



## என் உயிர்த் தோழி.

*பருவ மலர்களாய் இருந்த நாம் இன்று*
*பழுத்த பழங்களாய் உள்ளோம்*
*பல்லாண்டுக் கிறுக்கல்களால்*
*பலவடிவம் கொண்டோம்*

*உறவுகளின் பெருக்கத்தால்*
*உளைச்சல்கள் பல கண்டோம்*
*உன் அழகை நான் அளந்து*
*உள்ளம் எனை நீ நிறைத்தாய்*

*பெற்றோரின் பெருந்தவிப்பால்*
*பெருமையோடு துணையைப்பெற்றேன்*
*பேரன்பு காட்ட பிள்ளைகள் இன்று*
*பேரலைக் கடலுமெமை தூரத்திப் பிரித்தது*

உறவுகளுக்காக—உடுத்த ஆடையுடன் தாய்நாட்டிலேயே அகதிகளாகிவிட்ட இலட்சக்கணக்கான தமிழர்களுக்காக—பெற்றோரையும் உற்றாரையும் இழந்து அனாதைகளாகிவிட்ட குழந்தைகளுக்காக—பெனிக் கணக்கில்கூட உதவ நாங்கள் தயாராயில்லை.

ஆக மொத்தத்தில்—
நாட்டை மறந்தோம்—மொழியை மறந்தோம்—ஒரு தேசிய இனத்தின் பண்புகளை நிலைநாட்டாமல் தூக்கி எறிந்தோம்.
கடவுள்களைப் பகடைக்காய்களாக்கி அதிலும் இதிலும் மதம் மாறினோம்.
தமிழனோடு தமிழன் ஒற்றுமையின்றி ஒருவர்க்கொருவர் இடையூறாக வாழ்கிறோம்.கற்றோமோ கைநாட்டோ?—காசுக்கணக்கில் நான்பெரிது நீபெரிது என்று தலைக்கனம்கொண்டு திரிகிறோம்.அந்நிய நாடுகளில் அந்நாட்டு மக்களே வெறுக்கிற பண்புகளை நாகரீகம் என்று பின்பற்ற முனைகிறோம்.
ஆண்பெண் பேதமின்றி கவர்ச்சிகளுக்கு முதன்மையளிக்கிறோம்.இதுதான் நாங்கள் நடக்கும் பாதை.

பாதையா?
பாதை என்பது ஒழுங்கு படுத்தப்பட்ட வழி.மனிதன் நடப்பது பாதை மிருகங்கள் நடப்பது போக்கு.இந்தப்போக்குகள்கூட ஓர் ஒழுங்கில் மாறாத அடிச்சுவட்டில் அமைந்திருக்கின்றன.ஆனால் மனிதன்?—
உலகின் முதல்நாகரீகத்தை உருவாக்கியமனிதன்—தமிழன்—
இந்தப்போக்கு வழியாகக்கூட நடக்கத்தெரியாதவனாக இருக்கிறான்.
இவற்றிலிருந்து எம்மை மீட்டெடுக்கவல்லவர் யாரோ?

— அழலாடி —

*தாய்நாட்டின் தாகங்கள் உனக்கு*
*தாய்மையின் பெருமைதர வந்தவள் நீ*
*வாய்மணக்கும் செந்தமிழின் உடமை நீ*
*வல்லூறுகளின் நடுவில் பெண்புலி நீ*

*வீராங்கனையான விடியல்தேடும் மலர்*
*உன் வாழ்வின் விடிவைத்தேடுகிறேன்*
*விடிவுண்டோ வடிவுண்டோ என்று*
*பாறாங்கல்லாய் நெஞ்சு கனக்கிறது*

*விடுதலைக்காய் தவிக்கிறது தாய்மண்*
*விடிவுகளின் சுவடுகளில் தடம்வைத்த*
*என்தோழி! வேதனையின் நினைவுகளில்*
*முகவரியில்லாத உன் முகத்தைத்தேடுகிறேன்.*

— இந்திரா மணிவண்ணன்



* பெருமளவு மக்கள் தங்கள் பிறந்தநாடுகளைவிட்டு யுத்தம் பஞ்சம் போன்ற காரணங்களினால் அல்லது சிறந்த வாழ்க்கை வசதிகளைத்தேடி வெளியேறி வருகின்றனர். இந்த வரிசையில் இடம்பெறும் நாடுகளில் இலங்கையும் முதற்பத்து நாடுகளில் ஒன்றாக இடம்பெறுகிறது. 17 மில்லியன் மக்களில் 1992ம் ஆண்டின் இறுதிவரை 1.5 மில்லியன் மக்கள் இலங்கையைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களில் 5லட்சம்பேர் இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தம் காரணமாக அகதியாக வெளியேறியவர்கள். 2 லட்சம்பேர்வரை இந்தியாவின் தமிழ்நாட்டில் வாழ்ந்துவருகின்றனர். ஏனையோர் பிரான்ஸ் ஜெர்மனி பிரிட்டன் சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளிலும் கனடா அமெரிக்காபோன்ற நாடுகளிலும் வாழ்ந்துவருகின்றனர்.

6லட்சம் பேர்வரை அரபுநாடுகளில் குறிப்பாக சவூதி அரேபியா குவைத் ஐக்கிய அரபுக்குடியரசு ஓமான் பஹ்றெய்ன் போன்ற நாடுகளில் வேலைசெய்கின்றனர். இவர்களில் 60 வீதமானோர் வீட்டுவேலைகளிலும் வீட்டுப்பணிப்பெண்களாகவும் வேலைசெய்கின்றனர்.

ஏனைய 4 லட்சம்பேர் உலகின் பலநாடுகளிலும் பரந்து வாழ்கின்றனர். இவர்களில் கல்வியறிவுள்ளவர்கள்,பொறியியலாளர்கள்,வைத்தியர்கள், கணக்காளர்கள்,நில அளவையாளர்கள்,ஆசிரியர்கள் எனப்பலதுறைகளிலும் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் 90வீதமானோர் தங்கள் குடும்பங்களுடன் வாழ்ந்துவருகின்றனர். இலங்கையின் வைத்தியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வெளிநாடுகளில் வேலைசெய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையைவிட்டு வெளியேறியவர்களில் பெரும்பான்மையினர் வட கிழக்கு மாகாணங்களைப் பிறப்பிடமாகக்கொண்ட தமிழர்கள் என்றபோதிலும் நாட்டைவிட்டு வெளியேறிய மூன்றில் இருபகுதி வைத்தியர்கள் சிங்கள இனத்தவர்களே. பல்வேறு துறைகளிலும் திறமைபெற்ற பல சிங்களவர்கள் அண்மைக்காலமாக நாட்டைவிட்டு பெருமளவு வெளியேறியுள்ளனர். முஸ்லீம் மக்களில் பெரும்பான்மையினர் இஸ்லாமிய நாடுகளுக்கே செல்கின்றனர்.

ஆனால் பெருமளவு இலங்கையர்களின் வெளியேற்றம் சில நன்மைகளையும் இலங்கைக்குத் தந்துள்ளது. 1992ம் ஆண்டில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட 700மில்லியன் டொலர்களில் 500மில்லியன் டொலர்கள் அரபுநாடுகளில் வாழும் இலங்கைத்தொழிலாளர்கள் அனுப்பியவையாகும்.

எனினும் திறமைசாலிகளின் தொடர்ச்சியான வெளியேற்றம் இலங்கைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

# என்ன

## எஸ்.கந்தசாமி.

* ஜெர்மனியின் மிகப்பெரிய கம்பனியான பென்ஸ் கம்பனி 92ம் ஆண்டில் மொத்தலாபத்தில் 25வித இழப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. 93ம் ஆண்டிலும் 25வித இழப்பு ஏற்படலாம் எனவும் தெரிவிக்கிறது. 92ம் ஆண்டில் 18ஆயிரம் தொழிலாளர்களை வேலைநீக்கம்செய்த மேற்படி கம்பனி 93ம் ஆண்டிலும் 15ஆயிரம் தொழிலாளர்களை நீக்கம்செய்யவுள்ளது.

* இத்தாலியில் உள்ள 95ஆயிரம் தேவாலயங்களில் 10ஆயிரம் தேவாலயங்கள் விற்பனைக்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தாலியில் சராசரி 2சதுரமைலுக்கு ஒரு தேவாலயம் உள்ளது. இங்கு ஒழுங்காகப்

பிரார்த்தனை செய்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவருவதாகவும் 25விதமான இத்தாலியர்களே இவ்வாறு பிரார்த்தனைக்குச் செல்வதாகவும் அறியப்படுகிறது. அண்மையில் விற்பனைசெய்யப்பட்ட சில தேவாலயங்கள் விளையாட்டரங்குகளாகவும் டிஸ்கோவிற்கும் பயன்படுத்தப்பட்டமையால் இனிமேல் விற்பனைசெய்யப்படும் தேவாலயங்களை கலாச்சார மையங்களாக மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

* 60 வயதுக்குமேற்பட்ட ஐரோப்பியர்களில் 10விதமானோர் தொடர்ச்சியாக வேலைசெய்துவருகின்றனர். இவர்களில் 25விதமானோர் விவசாயத்துறைகளில் வேலைசெய்கின்றனர். ஐரோப்பியர்களில் பிரெஞ்சுப்பெண்களே அதிககாலம்வாழ்கின்றனர். சராசரி 84 வயதுவரை இவர்கள் வாழ்கின்றனர். ஐரிஷ்காரர்களே குறைந்தகாலம் வாழ்கின்றனர். அதாவது சராசரி 76வயதுவரை வாழ்கின்றனர்.

* பிரான்சில் வாழும் 4மில்லியன் வெளிநாட்டவர்களில் சட்டவிரோதமாக வாழும் 3.5மில்லியன் வெளிநாட்டவர்களை வெளியெற்றப்போவதாக உள்நாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

* முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து 16மாதங்களின்முன் சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்ட உக்கிரெய்ன் 52மில்லியன் மக்களைக்கொண்டது. ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சினுக்கும் பாராளுமன்றத்துக்குமிடையே நடைபெற்றுவரும் அதிகாரப்போட்டி உக்கிரெய்னின் சுதந்திரத்தைப் பாதிக்கலாம். உக்கிரெய்னின் இறைமையை முழுமையாக அங்கீகரிக்க ரஷ்யா இன்னும் தயங்குகிறது. ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய இராணுவத்தைக்கொண்டதும் பல அணு ஆயுதங்களைக்கொண்டதுமான நாடு இது. 300ஆண்டுகளாக நிலவிவந்த ரஷ்ய–உக்கிரெய்னின் இணைப்புக்குப் பரிசாக 1954ம் ஆண்டு அப்போதைய சோவியத் ஜனாதிபதி குருஷேவ் உக்கிரெய்னுக்கு கிறிமியா குடாநாட்டைக் கொடுத்ததை ரஷ்யர்கள் பலர் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

# நடக்கிறது?

* கடந்த ஏப்ரல் மாதம் 23ம் திகதி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான அத்துலத் முதலி தேர்தல்பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார். வழக்கம்போலவே விடுதலைப்புலிகளை இலங்கை அரசு குற்றம் சாட்டியது. ஆனால் லலித்தின் பாதுகாவலரோ கறுப்புச்சேர்ட் அணிந்திருந்த ஒருவரே சுட்டதாகவும் தான் திருப்பிச்சுட்டபோதும் குறிதவறிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இலங்கை அரசோ லலித்தைச் சுட்டுக்கொன்றவரை லலித்தின் பாதுகாவலர் சுட்டதாகவும் காயமடைந்த நபர் சயனைட் அருந்தி மரணமானார் எனவும் கூறுகிறது. ஆதாரமாக சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் வெள்ளைச்சேர்ட் அணிந்தபடி சூட்டுக்காயங்களுடன் இறந்துகிடந்த நபர் ஒருவரைக்காட்டுகிறது. இவரின் கழுத்தில் சயனைட்குப்பி காணப்பட்டது எனவும் தெரிவிக்கிறது.

எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல பல அரசு ஆதரவாளர்களே அரசின் இக்கூற்றை நம்பவில்லை. அரசியல் எதிரியான லலித்தின் வளர்ச்சிகண்டு ஜனாதிபதி பிரேமதாசாவே திட்டமிட்டு இக்கொலையைச் செய்தார் என்றே பலரும் கருதுகின்றனர். 91ம் ஆண்டு மார்ச்மாதம் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் கொலைக்கும் 92ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் இடம்பெற்ற ஜெனரல் கொப்பேகடுவவின் கொலைக்கும் விடுதலைப்புலிகளே காரணம் என்று அரசு கூறியபோதும் எதிக்கட்சியினர் பல சந்தேகங்களைக் கிளப்பியுள்ளனர்.

91ம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாசாவை பதவிநீக்கம் செய்ய முயற்சிசெய்த லலித் பின்னர் ஐக்கியதேசீயக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். முன்னாள் அமைச்சர் காமினியுடன் சேர்ந்து ஜனநாயக ஐக்கிய தேசிய

அபிவிருத்தி அடைந்துவந்தது. அதேசமயம் வடக்கும் கிழக்கும் சிறுத்தன. பொருளாதாரத் தடைகளும் மின்சாரத் தடைகளும் வடகிழக்கின் பொருளாதாரத்தையே நிர்மூலமாக்கிவிட்டன. வெளிநாடுகளின் வற்புறுத்தல்களும் இராணுவ நடவடிக்கைகளின் தோல்விகளும் பிரேமதாசாவை அரசியல் தீர்வு காணவேண்டிய நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தின. விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை பின் பாராளுமன்றத் தெரிவுக்குழு எனப் பல நடவடிக்கைகளைப் பிரேமதாசாவின் அரசு எடுத்தபோதும் தீர்வுகள் எதுவும் காணப்படவில்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலர் தமிழர்களின் அடிப்படைப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எவ்வித ஆர்வமும் காட்டவில்லை. மாறாக வன்செயல்கள் தொடரவும் இனங்களிடையே மோதல்களை ஏற்படுத்துவதிலும் காரணகர்த்தாக்களாக இருந்தனர். தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை முற்றாக நிராகரித்துவிட்ட நிலையில் அண்மைக்காலத்தில் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளுமுகமாக ஏதும் தீர்வுகள் ஏற்படும் என்ற நம்பிக்கையும் தமிழர்கள் மத்தியில் இல்லை.

பிரேமதாசா ஒரு பலவீனமான மந்திரிசபையையே வைத்திருந்தார் எனலாம். பல முடிவுகள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்குத் தெரியாமலேயே பிரேமதாசாவினாலேயே மேற்கொள்ளப்பட்டன. தகுதிவாய்ந்த பலர் புறக்கணிக்கப்பட்டனர். இதனால் பல தகுதிவாய்ந்த அரசு அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேறினர். மேற்படி ஜனாதிபதியின் நடவடிக்கைகள் காரணமாக அவரின் கட்சி உறுப்பினர்கள் பலரே ஜனாதிபதியை வெறுக்க ஆரம்பித்தனர். பல பத்திரிகைகள்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள்,

91ம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாசாவை பதவிநீக்கம் செய்ய முயற்சிசெய்த லலித் பின்னர் ஐக்கியதேசியக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். முன்னாள் அமைச்சர் காமினியுடன் சேர்ந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஆரம்பித்தார். பிரேமதாசாவின் சர்வாதிகாரப்போக்கினால் அதிருப்தியடைந்த பல ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகி லலித்தின் கட்சியில் இணைந்துவந்தனர். மேமாதம் 17ம் திகதி நடைபெறவிருந்த மாகாண சபைத் தேர்தல்களில் DUNF குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டலாம் எனவும் கருதப்பட்டது. இந்நிலையில் லலித் கொலைசெய்யப்பட்டது அவரது கட்சிக்கு மேலும் ஆதரவாளர்களைச் சேர்த்துவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

லலித்தின் கொலை நடைபெற்று ஒரு வாரத்தின் பின் மேமாதம் முதலாம் திகதி ஜனாதிபதி பிரேமதாசா கொலைசெய்யப்பட்டார். பலவீனமான நாடுகளை வழிநடத்த பலம் வாய்ந்த தலைவர்கள் தேவை. பலம்வாய்ந்த தலைவர்கள் தங்கள்பதவிகளைவிட்டு விலகும்போது பெரியதொரு வெற்றிடத்தை விட்டுச்செல்கின்றனர். இதேநிலையில் பிரேமதாசாவின் கொலையை அடுத்து இலங்கையும் உள்ளது எனக் கருதலாம். இது மிகவும் ஆபத்தானநிலையே. தொடர்ச்சியாக அண்மைக்காலமாக பல வன்செயல்கள் இடம்பெற்றுவரும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் தெற்கும் மேற்கும் ஓரளவு பொருளாதார வளர்ச்சியடைந்தது. உல்லாசப் பயணத்துறையும்

தகுதிவாய்ந்த பலர் புறக்கணிக்கப்பட்டனர். இதனால் பல தகுதிவாய்ந்த அரச அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேறினர். மேற்படி ஜனாதிபதியின் நடவடிக்கைகள் காரணமாக அவரின் கட்சி உறுப்பினர்கள் பலரே ஜனாதிபதியை வெறுக்க ஆரம்பித்தனர். பல பத்திரிகைகள்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், பத்திரிகைநிருபர்கள்மீது தாக்குதல்கள் அதிகமாக இடம்பெற்றன.

தற்போது பிரேமதாசாவின் மறைவை அடுத்து ஐக்கிய தேசியக்கட்சியில் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. பிரேமதாசாவின் மனைவியான ஹேமா பிரேமதாசா தனது கணவரின் திட்டங்களை நிறைவேற்றத் தான் பாடுபடப்போவதாகவும் சகலவழிகளிலும் தனக்கு உதவிசெய்யுமாறும் பிரேமதாசாவின் ஈமக்கிரியைகளை அடுத்து சுதந்திர சதுக்கத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டது பற்றியும் பலவேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. தீவிரமாக அரசியலில் இறங்க ஹேமா தீர்மானித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. 1960ம் ஆண்டு பண்டாரநாயக்காவின் கொலையை அடுத்து திருமதி பண்டாரநாயக பிரதமரானதையும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள 71 வயதான டி.பி.விஜேதுங்க, 94ம் ஆண்டு டிசம்பர் ஜனாதிபதி தேர்தல்வரை கடமையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழில் அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க பிரதமராக ஜனாதிபதியினால் நியமிக்கப்படுள்ளார். மேலும் பழைய மந்திரிசபை உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் நியமனம் பெற்றுள்ளனர்.

*

* ஐரோப்பிய நாடுகளின் இணைப்பினால் 93ம் ஆண்டில் ஏற்படக்கூடிய நன்மைகள்பற்றி சில ஆண்டுகளுக்குமுன் பல அரசியல் தலைவர்களும் பிரகாசமான கருத்துக்களைதெரிவித்திருந்தனர். ஆனால் 93ம் ஆண்டில் பலநாடுகளிலும் பலவிதமான நெருக்கடிகளையே காணக்கூடியதாகவுள்ளது. 1989ம் ஆண்டு ஏற்பட்ட கம்யூனிசத்தின் வீழ்ச்சி தற்போது நன்மைகளைவிட அதிக பிரச்சினைகளையே ஏற்படுத்திவருகிறது. இரு ஜெர்மனிகளின் இணைப்பினால் ஏற்பட்டுள்ள செலவீனம் மேற்கு ஜெர்மனியில் செழிப்பாக இருந்த பொருளாதாரத்தையே சீர்குலைத்துவிட்டது எனலாம். முன்னாள் யூகோஸ்லவியாவில் இடம்பெற்றுவரும் யுத்தம் இலட்சக்கணக்கில் அகதிகளை மேற்கு ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் செல்லவைத்துவிட்டது. ஐக்கிய நாடுகள்சபைக்குப் பலவேறு நெருக்கடிகளையும் மேற்படி யுத்தம் ஏர்படுத்திவருகிறது. பெருமளவு அகதிகள் வெளிநாட்டவர்வருகை ஜெர்மனி,பிரான்ஸ்,அவுஸ்ற்றியாபோன்ற நாடுகளில் பல வன்செயல்கள் இடம்பெறவும் தீவிர வலதுசாரிகளினது வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்துவிட்டது. பிரான்ஸில் 12 ஆண்டுகால சோஷலிஸ்ட் கட்சி ஆட்சியை நிராகரித்த பிரெஞ்சு மக்கள் வலதுசாரிக்கட்சிகளை பெரும்பான்மை பலத்துடன் தெரிவுசெய்துள்ளனர். இத்தாலியில் அரசியல்வாதிகளின் பெரும்பான்மையினர்மீது ஊழல் குற்றச்சாட்டுகளும் மாபியா இயக்கத்துடனான தொடர்புகளும் நிரூபிக்கப்பட்டுவருகின்றன. அண்மையில் பெறப்பட்ட வாக்கெடுப்புக்களின்படி ஸ்பெயின் நாட்டின் பிரதமரும் ஜெர்மனியின் சான்சிலரும் தற்போது தேர்தல்கள் நடைபெற்றால் தோற்கடிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கின்றது. ஒரு வருடத்திற்குமுன் இவர்களை அசைக்கவே முடியாத நிலை இருந்தது. ஜேர்மனியும் பிரான்சும் இந்த வருடம் பொருளாதார வளர்ச்சியையே நினைத்துப்பார்க்க முடியாத நிலையில் உள்ளன. ஐரோப்பியாவின் 5 பெரிய நாடுகளிலும் வேலையில்லாதோர்தொகை சராசரி 3 மில்லியனைத் தாண்டிவிட்டது. முழு ஐரோப்பாவிலும் 10 வீதமானோர் வேலையற்றுள்ளனர். வீடற்றவர்களும் பிச்சைக்காரர்களும் அதிகரித்துள்ளனர். லண்டன் வெஸ்ற் என்ட் பகுதியிலும் பாரிசின் மெட்ற்றோ நிலையங்களிலும் பிச்சையெடுப்பவர்களையும் தரையில் உறங்குபவர்களையும் அதிகமாகக் காணலாம். பல தொழிற்சாலைகளும் வியாபார ஸ்தாபனங்களும் மூடப்பட்டுவருகின்றன. கடந்த 3 ஆண்டுகளாக 56 பில்லியன் டொலர்களை ஜெர்மனி ஆண்டுதோறும் முன்னாள் கிழக்கு ஜெர்மனியில் செலவிட்டுவருகின்றது. 1995ம் ஆண்டுமுதல் ஜெர்மன் மக்கள் தங்கள் வருமானத்தில் மேலதிகமாக 9 வீதத்தை கிழக்கு ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சிக்குச் செலுத்தவேண்டும். ஐரோப்பிய நாடுகளில் தீவிர வலதுசாரிக் கட்சிகள் மக்களின் அதிருப்திகளைச் சாதகமாகக்கொண்டு வளர்ந்துவருகின்றன. அண்மையில் நடைபெற்ற பிரான்சின் நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான தேசீய முன்னணி 12.5வீத வாக்குகளைப்பெற்றது. மேலும் ஐரோப்பாவில் பெருகிவரும் உற்பத்திச்செலவு காரணமாக பல உற்பத்தி நிறுவனங்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் தென்கிழக்காசிய நாடுகளையும் நோக்கிச்செல்கின்றன.

* 1962ம் ஆண்டு உகண்டா சுதந்திரம் பெற்றபோது 60 ஆயிரம் ஆசிய நாட்டவர்கள் இருந்தனர். இந்திய உபகண்டத்தின் மேற்குக்கரைப்பகுதி பஞ்சாப் பகுதி, ஆகியவைகளில் இருந்து 100 ஆண்டுகளுக்குமுன் பிரிட்டிஷ் காலனியாக இருந்த உகண்டாவில் குடியேறிய இவர்களில் இந்துக்கள்,முஸ்லீம்கள்,சீக்கியர்கள்,கிறிஸ்தவர்கள் அனைவரும் அடங்குவர். உகண்டாவின் கடுமையான சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாது. பிரிட்டிஷாருடன் சேர்ந்து நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு எடுத்த இவர்கள், 6.5 மில்லியன் ஆபிரிக்கர்கள் மத்தியில் வாழ்ந்தபோதும் சுமுகமான உறவுகளைக் கொண்டிருந்தனர், தொழிற்சாலைகளையும் வர்த்தக ஸ்தாபனங்களையும் நடாத்திவந்ததுடன் உகண்டாவின் பிரதான ஏற்றுமதிகளான கோப்பி,தேயிலை,பருத்தி செம்பு ஆகியவைகளையும் பெருமளவு தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். ஆனால் இவர்கள்நிலை 1972ம் ஆண்டு முழுமையாக மாற்றமடைந்தது. 1972ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் ஜனாதிபதி இடி அமீன் 90 நாட்களுக்குள் ஆசிய நாட்டவர்கள் அனைவரும் வெளியேறவேண்டுமெனவும் ஒருவருக்கு 125 டொலர் பெறுமதியான பொருட்களைமட்டுமே கொண்டுசெல்லலாம் என **அறிவித்தது பேரிடியாகவே இருந்தது. செப்டம்பர் மாத இறுதியில் பலர் வெளியேறினர். அதிகரித்துவந்த வன்செயல்கள் கட்டுப்பாடற்ற இராணுவம் இவர்களை விரைவில் வெளியேறச்செய்தது.**

தற்போது 20 ஆண்டுகளின் பின் இவர்களில் பலர் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். தற்போதைய ஜனாதிபதி முசவேனி 1பில்லியன் டொலர் பெறுமதியான 7500 சொத்துக்கள் உரிமைக்குரிய ஆசியநாட்டவர்களிடம் மீண்டும் வழங்கப்படும் என உறுதியளித்துள்ளனர்.கடந்த ஆண்டு உகண்டாவில் இருந்து முன்பு வெளியேறி இந்தியா,பிரிட்டன் மற்றும் வட அமெரிக்க நாடுகளில் குடியேறியிருந்த ஆசிய நாட்டவர்களில் இரண்டாயிரம்பேர் உகண்டாதிரும்பியுள்ளனர். மேலும் பலர் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் வருகையை அடுத்து உகண்டாவின் தலைநகரான கம்பலாவிலும் சுற்றுப்புறங்களிலும் பல மாற்றங்களைக் காணமுடிகிறது. கைவிடப்பட்டிருந்த பழைய பெரிய கட்டிடங்கள் புதுப்பிக்கப்படுவதுடன் கிராமப்புறங்களில் தோட்டத்தொழில் அபிவிருத்தியடைந்து புதிய தொழிற்சாலைகளும் செயற்பட ஆரம்பித்துள்ளன. உகண்டாவின் 10 ஆயிரம் ஆப்பிரிக்கர்கள் அண்மைக்காலத்தில் வேலைவாய்ப்பைப்பெற்றுள்ளனர்.

---

## எழுத்தறிவில்லாதவர்கள் எத்தனை பேர்?

1990ம் ஆண்டில் எழுத்தறிவு இல்லாதவர்களின் எண்ணிக்கை 94.8 கோடிகள்.1985ம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி இது 95 கோடிகளாக இருந்தது. உலகமக்கள் தொகையில் ஏறக்குறைய 26.6 சதவீதமான மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். 2000 ஆண்டுவரும்போது இது 21.8 வீதமாக அல்லது 93.5 கோடிகளாகக் குறைந்துவிடும்.

# மௌனத்தில் அழுகின்ற மனங்கள்.



—இந்துமகேஷ்.

இந்த நண்பனைப்பிரியப்போகும் துன்பத்துடன் ஒப்பிடுகையில் அம்மாவை, தங்கைகளை,என் கவிதாவைக்கூட பிரியும்போது ஏற்பட்ட துன்பம் சாதாரணமாகப்பட்டது.
எல்லாம் பொய்வாழ்க்கை! என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் விமல்.
அன்புமட்டும்தான் மெய்...அது ஒன்றே நிதர்சனம்!

''நீ எப்போது சிரிண்டோவ் போகவேண்டும் கிறிஸ்டி'?'' என்று வினவிக் கொண்டே மறுபடி பத்திரத்தைப்பிரித்தான் விமல்.
ஜனவரி 2 என்றது பத்திரம்.
''இன்னும் நாலுநாளைக்கு நாங்கள் ஒன்றாக இருக்கலாம்..!''என்றான் கிறிஸ்தோ
''எனக்கு நம்பிக்கை இருக்குது கிறிஸ்டி....அடுத்தகிழமைமட்டில் எனக்கும் சிற்றி அடித்துவிடுவார்கள்...சிரிண்டோவிலும் நாம் சந்திக்கலாம்.''
''வேணாம் விமல்...உனக்காவது நல்ல இடம் கிடைக்கட்டும்...என்னிலும் உனக்குக் குடும்பப்பொறுப்புக்கள் அதிகம்...!''
''ஒவ்வொரு மனிதனும் நினைக்கிறதெல்லாம் நடக்கிறதாயிருந்தால் இந்த வாழ்க்கையிலை ஒரு சுவாரஸ்யமே இல்லாமல் போயிடும்...!''என்றான் விமல்.
''ஆனாலும் எங்கடை வாழ்க்கையை நாங்கள் ஒரு நம்பிக்கையோடைதான் எதிர்நோக்கவேணும்...அது முக்கியம்.''என்றான் கிறிஸ்தோபர்.

அங்கிள் விழித்துக்கொண்டார்...
''நல்லா நேரம்போச்சுது...!'' என்றார்...போர்வையைச் சுருட்டிவைத்துவிட்டு விமலின் பக்கம் திரும்பினார்.
''என் தம்பி...என்னை எழுப்பியிருக்கலாமே'?''என்றார்.
''ராத்திரிமுழுக்க நீங்கள் தூங்கேல்லை...அதுதான் கொஞ்சநேரம் கிடக்கட்டும் எண்டு விட்டன்!''
''தேத்தண்ணி எடுக்கேலாதே தம்பி..!''
''அதாலை என்ன...இனி மத்தியானச் சாப்பாடு தாறநேரமாயிட்டுதே!'' என்றான் விமல்.

தூங்கி எழுந்தும்கூட அங்கிளின் முகத்தில் ஒரு தெளிவைக் காணமுடியவில்லை. ...கவலைக்கோடுகள்தான் நிறைந்திருந்தன...இரவில் அவர்கண்ட கனவு அவரைப் பெரிதும் பாதித்திருந்தது...
''முகம் கழுவிப்போட்டு வாறன்!'' என்று வெளியே போனார் அவர்...
''பாவம்..இந்த வயசிலை இங்கைவந்து கஷ்டப்படுகிறோர்...!''என்று இரக்கப்பட்டான் விமல்.
''கரைதெரியாத ஒரு சமுத்திரத்துக்குள்ளை எல்லாருமே வீழ்ந்து மூழ்கிக்கொண்டிருக்கிறம்...யாராவது ஒரு கரையைக் காட்டுகிறவரைக்கும் யாரும் யாரையும் காப்பாற்றிவிட முடியாது...!''என்றான் கிறிஸ்தோபர்.

அத்தியாயம்:பதினொன்று.

நேரம் நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்தது.
இன்னும் சிலநிமிடங்களில் புதுவருடம் பிறந்துவிடும்..
வானத்துத்தாரகைகள் எல்லாம் மண்ணில் இறங்கினாற்போல்..வண்ண ஒளிக்குமிழ்கள் கண்களைப் பறித்துக்கொண்டிருந்தன.
ஒருநாளுமில்லாதவாறு இப்போதைக்கென்று நடைபாதைகளை நிறைத்துக் கொண்டு மனிதர்கள்....
நிலத்திலிருந்து மேலெழுந்து வாணங்கள் உயரத்தில் நின்று பூவாய்ச்சிரித்துச் சிதறின...இயற்கைக்கு நாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்று செயற்கைக்கோள்கள் கண்சிமிட்டின...
முடிந்துபோன வருஷத்தைப்பற்றிக் கவலைப்படாமல் வரப்போகும் வருஷத்தை ஆரவாரித்து வரவேற்கும் மனோபாவம்.
புத்தாண்டு வாழ்த்துக்கள்...
கைகுலுக்கல்கள்...முத்தங்கள்...மகிழ்ச்சியைப்பங்குபோடும் திராட்சைரசப் பரிமாற்றங்கள்....
நகரத்தின் மத்தியிலிருந்த அந்தச்சேர்ச்சை நெருங்கமுடியவில்லை...
''சற்றுப்பொறுத்துப்போகலாம்!''என்றான் கிறிஸ்தோபர் அருகில் நின்ற விமலிடம்.
இவர்களைக் கடந்து பலர்போய்க்கொண்டிருந்தார்கள்...எதிர்ப்படுகின்ற முகங்களிலெல்லாம் மகிழ்ச்சி தெரிந்தது...
கிழவன் கிழவிகள்கூட குழந்தைத்தனமாய்ச் சிரித்துமகிழ்ந்தார்கள்.
இளைஞர் யுவதிகளின் அங்கசேஷ்டைகளுக்கும் குறைச்சல் இல்லை...
விமலுக்குப் பக்கத்தில் நின்ற ஜெர்மானிய இளைஞன் ஒருவன் தன்னருகேவந்த யுவதி ஒருத்தியை(அவனுடைய காதலியோ'?) தன்னருகே சட்டென இழுத்துக்கொண்டான்...அவளை இறுக அணைத்து அவளது இதழ்களைத் தன் வாயினால் கவ்விக்கொண்டான்...
அவளுடைய கைகள் அவனது கழுத்தை இறுக வளைத்துக்கொண்டன...
அவர்கள் அந்த வினாடியில் தங்கள் சுற்றாடலை மறந்து வானத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினார்கள்.

விமல் புன்னகைத்துக்கொண்டான்...
கவிதாவை ஜெர்மனிக்குக் கூட்டிவந்து இந்தக்காட்சியைக் காட்டினால் அவள் என்ன சொல்வாள் என்று கற்பனை செய்து பார்த்தான்...
அவள் தன் கைகளால் தன் கண்களை மூடிக்கொள்வாள்...
''கவிதா! இங்கே பார்..இதுதான் காதல்சாம்ராஜ்யத்தின் இனியகிமிடங்கள்..''
''ச்சீ..போங்கள்...இதுகளை ரசித்துக்கொண்டு...!உங்களுக்கு வெட்கமாயில்லையா'?'' என்று பொய்க்கோபம் காட்டுவாள்..
''ஏன் இதுகள் பொது இடத்திலை இப்பிடிச்செய்யுதுகள்..வெட்கமில்லாமல்..'? இதுகளுக்கு வீடுவாசல் இல்லையா'?'' என்பாள்.
ஆசைக்கு ஏது வெட்கம்'?

ஒரு கோயில்திருவிழாவில் சனத்திரளின் மத்தியில் இருட்டில் கவிதாவின் கையைப் பற்றிக்கொண்டபோது அவளுடைய மென்கரம் நடுங்கியதையும்,அவள் சடக்கெனத்திரும்பி முறைத்து அது இவன்தான் என்று தெரிந்துகொண்டதும் இவனது கைவிரல்களுடன் தன் விரல்களைக்கோர்த்துக்கொண்டு அந்த ஸ்பரிசத்திலேயே வானுலகில் சஞ்சரித்ததையும்..இப்போது நினைத்துப் பார்த்தான் விமல்...

ஸ்பரிசசுகம்தான் காதலின்ஜீவநாடி என்றால் இங்கே காதல் கரைபுரண்டு ஓடுகிறது என்பதே உண்மை...
ஆனால்—
இங்கே உதட்டைக்கடிப்பவர்களெல்லாம் உண்மையான காதலர்கள் என்று ஒப்புக்கொள்ள மனம் மறுத்தது.
இது காதல் அல்ல..
இதற்குப் பெயர் வேறு!

சடசடவென வெடிச்சத்தங்கள் காதுகளை அடைத்தன..
தேவாலய மணிகள் எல்லாம் பெருநாதம் செய்தன...
''இப்ப நாங்கள் சேர்ச்சுக்குள்ளை போகலாம்!''என்று நடந்த கிறிஸ்தோபரின் பின்னால் தொடர்ந்தான் விமல்.
''ஹலோ!''என்று அருகில் ஹெல்லா.
இத்தனை பெரிய கூட்டத்திலுள்ளும் இவள் எப்படி என்னைக் கண்டுகொண்டாள் என்று ஆச்சரியப்பட்டான்.
''ஹலோ கிறிஸ்டி!...புத்தாண்டு வாழ்த்துக்கள்!'' என்று கிறிஸ்தோபரின் கையைப்பற்றிக் குலுக்கினாள் ஹெல்லா
''எல்லாவளங்களும் நிறைந்து எதிர்காலம் இனிமையுடையதாகட்டும்!''என்று வாழ்த்தினான் கிறிஸ்தோபர்.
ஹெல்லா விமலைப்பார்த்துச்சிரித்தாள்...
''புத்தாண்டு வாழ்த்துக்கள்!''என்றான் விமல்....
கைகுலுக்குவதற்காகக் கையைநீட்டினான்...
அவனது கையைப்பற்றியவள் சட்டென அவன் கன்னத்தில் உதடுகளைப் பதித்தாள்...

''புத்தாண்டு வாழ்த்துக்கள் விமல்..!''
கிறிஸ்தோபர் ஹெல்லாவைப்பார்த்து பொய்க்கோபம் காட்டினான்...
''அவனுக்குமட்டும் என்ன பிரத்தியேக வாழ்த்துக்கள்!''
''பொறாமைப்படக்கூடாது கிறிஸ்டி!'' என்றுசொல்லிச் சிரித்தாள் ஹெல்லா.

ஹெல்லாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் விமல்.
அவளுடைய திடீர் முத்தம் சிலிர்ப்பைத்தருவதற்குப்பதிலாக அவனுக்கு திகைப்பையே தந்தது.
இது சாதாரணம் என்று அவனால் கருத முடியவில்லை.
முத்தம் என்பது அளவுகடந்த அன்பின் வெளிப்பாடு! என்று அவன் புரிந்திருந்தான்.
நட்புடன்பழகும் கிறிஸ்தோபரைக்கூட முத்தமிடாத ஹெல்லா என்னைமட்டும் ஏன்...?
என் கவிதாவுக்கு நான் தந்த அந்த முதல்முத்தத்துக்கும் ஹெல்லா இப்போது எனக்குத்தந்த முத்தத்துக்கும் அதிக வேறுபாடு இல்லை...!
''விமல் இந்த ஜெர்மன் பெட்டையின்ரை கொஞ்சலைப் பெரிசாய் எடுத்துக் கொள்ளாதை...இதுமாதிரி இவள் எத்தினையோ ஜெர்மன் பெடியளைக் கொஞ்சியிருப்பாள்...அதை மறந்திட்டு வா...சேர்ச்சுக்குப்போவம்..!''
''இவளின்ரை கொஞ்சலை இப்ப ஆர் பெரிசாய் எடுத்தது...?அதை நான் எப்பவோ மறந்திட்டன்..!''என்று விமல் சொன்னபோதும், ஹெல்லா அவனது மனத்துக்குள் மணத்துக்கொண்டேயிருந்தாள்.

அத்தியாயம்:பன்னிரண்டு.

சிரிண்டோவ் காம்புக்கு அகதிகளை ஏற்றிச்செல்லும் பஸ்ஸில் கிறிஸ்தோபரை ஏற்றி வழியனுப்பிவிட்டு கிலக்கீழ் ரயிலில் அறைக்குத் திரும்பிக்கொண்டிருந்தான் விமல்.
மனம் பெரிதாய்க் கனத்தது.
எத்தத்துன்பத்திலும் மனம் கலங்காத கிறிஸ்டி இன்றைக்கு விமல் அவனை வழியனுப்பிவைத்த கணத்தில் எப்படித்துடித்துப்போனான்.
கிறிஸ்தோபரின் தோளில் முகம்புதைத்து விமலும் அழுதான்...
''என்னடா இது..பெட்டையள்மாதிரி...!''என்று விமலின் கண்ணீரைத் துடைத்துவிட்டு கிறிஸ்தோபர் தானும் அழுதான்.
''பிரிவதற்காகத்தான் உறவு...அதேமாதிரி மறுபடியும் இணைவதற்காகத்தான் பிரிவு..! –அன்றாட வாழ்க்கையில் இது சகஜம்...
ஆனால் இந்த வெளிநாட்டு வாழ்க்கையில் உறவுக்குப் பின்னால்வருகின்ற இந்தப்பிரிவு நிரந்தரமாகிவிடுவதும் உண்டு.

வாழ்க்கை என்பதே பெரும் புதிர்...
ஏன் பிறந்தோம்..எதற்காக வாழ்கிறோம் இதன் முடிவு எங்கே? என்கின்ற கேள்விகளுக்கெல்லாம் தெளிவான விடை கிடைக்காத புதிர்...
போகியைக்கேட்டால் அனுபவிக்கத்தான் வாழ்க்கை என்பான்.

யோகியைக்கேட்டால் ஜென்ம பாவங்களைத்தொலைத்துவிட்டு புண்ணியங்களைத் தேடிக்கொண்டு வானுலகம் போவதுதான் வாழ்க்கை! என்பான்.

மரணம் மனிதனைக்கொண்டுசேர்க்கிறவரையக்கும் இக்தக்கேள்விகளுக்குள்ளேயே நீச்சலடித்துக்கொண்டிருப்பதே இந்தக்கேள்விகளுக்கெல்லாம் விடையாகிப் போகிறது.பொன்னுக்காய்,பொருளுக்காய்,பெண்ணுக்காய்,மண்ணுக்காய்,புகழுக்காய் என்று போராடிக்களைத்துக் கடைசியில் உயிர்மூச்சைவிட்டு ஓய்வுகொள்ள வேண்டியதுதான்.

நிலக்கீழ் ரயில் தன்பாட்டில் இயல்பான வேகத்தில் போய்க்கொண்டிருந்தது.
விமல் உட்கார்ந்திருந்த பெட்டிக்குள் ஆட்கள் அதிகம் இல்லை.
புகையிரதம் தங்கிச்செல்லும் ஒவ்வொரு நிலையத்திலும் யன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டே வந்தான் விமல்.
ஒவ்வொன்றையும் எத்தனை அழகாய் தூய்மையாய் வைத்திருக்கிறார்கள்.
எங்கும் கவர்ச்சிமயம்...!
ஒரு நிலையத்தில் ரயில் தரித்தபோது–
தடதடவென ஆறேழுபேர்வரையில் உள்ளே ஏறினார்கள்.
கதவுகளை மறுபடி மூடிக்கொண்டு ரயில் புறப்பட்டது.
உள்ளே ஏறியவர்களில் இருவர் விமலின் முன்னால் இருந்த இருக்கையில் உட்கார்ந்தார்கள்...மற்றவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்...சத்தம்போட்டுக் கதைத்தார்கள்...சிரித்தார்கள்...எல்லோரும் ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்தது...
குருவிக்காரன்கள்! என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் விமல்.
ஒவ்வொருவனும் தலைமுடியை ஒவ்வொரு விதமாக அலங்கரித்திருந்தான்..
அல்லது அலங்கோலப்படுத்தியிருந்தான்.

ஒருவன் தன் தலையைச் சுற்றிவர மொட்டையடித்து உச்சியின் நீளத்துக்குப் பிடரிவரை வளர்த்த மயிரைச் சுருட்டிச் சுருட்டிக் கோழிச்சிறகுகள் மாதிரி கிமிரவைத்திருந்தான்.இன்னொருவன் உச்சிவகிடெடுத்துத் தலையில் இரட்டைப்பின்னல் போட்டிருந்தான். மற்றொருவன் முடியை முன்னால் அதிகம் வளர்த்து ஒரு கண்ணை மறைத்திருந்தான்–ஒற்றைக்கண்ணால் உலகத்தைப் பார்க்க விரும்பியவன்போல்.அடுத்தவன் மயிரை ஒட்ட அறுத்து பிடரியில் மட்டும் வாலறுந்த சேவல்மாதிரி இரண்டொரு கற்றைகளை நீள விட்டிருந்தான். எல்லோருமே முகங்களில் சாயம் அடித்திருந்தார்கள்...
அனேகமாகப் பச்சை குத்தியிருந்தார்கள்.
இவர்களது முடியலங்காரங்களைப் பார்த்துத்தான்போலும்–
குருவிக்காரங்கள் என்று தமிழ்ப்பெயர் சூட்டியிருந்தார்கள்.

இவர்களைப்பார்க்கும்போதெல்லாம் விமலுக்குக் குறவர்களின் ஞாபகம்வரும்.
இந்தக்குருவிக்கூட்டத்தில் மிக அழகான பெண்களும் இருப்பார்கள்.
அவர்கள் கூந்தலை வளர்த்து கோழிச்சாயம் மாதிரி பச்சை,சிவப்பு, மஞ்சள்,ஊதா என்று பலவண்ணங்களில் தலையைக்காட்டுவார்கள்...

நாகரீகம் முற்றி அநாகரீகமாய் மாறிக்கொண்டிருக்கிறது! என்று முதல்தடவையாக இவர்களைப்பார்த்தபோது விமல் நினைத்தான்.
கவர்ச்சியில் இதுவும் ஒருவகையோ?
கவர்ச்சி என்பது ஜெர்மானியர்களுக்குக் கைவந்தகலை...இவர்களுடன் இயல்பாகவே பிறந்தது கவர்ச்சி என்று எண்ணத்தோன்றுகிறது...
பேச்சில்,நடையில்,உடையில்,பாவனையில்,எதிலுமே ஒரு கவர்ச்சி.
இந்த ஜெர்மானியர்களிடமுள்ள சுவரும் விஷயங்களில் விமலை மிகவும் கவர்ந்தது இவர்களுடைய நேரம்தவறாமை.
நேர அட்டவணையிட்டு நிமிடமும் பிசகாமல் இவர்கள்மட்டுமல்ல இயந்திரங்களும் இயங்குகின்றன.
குறித்தால் குறித்தநேரத்தில் வந்துசேரும் பஸ்கள்,டிராம்கள், ரயில்கள்...
அளவான காசைப்போட்டால் விரும்பியதை வெளியே தள்ளும் பெட்டிக்கடைகள்...
நீ போட்ட காசுக்கு இவ்வளவுதான் பேசமுடியும் என்று வினாடியும் பிசகாமல் வாயடைத்துக்கொள்ளும் டெலிபோன் கூண்டுகள்...
எல்லாமே நேரம் நேரம் என்று அதிலேயே குறியாய் இருந்தன...
நாங்கள் எங்கள்நேரத்தை எவ்வளவு பாழாக்குகிறோம்...உழைக்கும் நேரங்களில் உறங்கிக்கொண்டு...! மண்ணில் பிறந்து கண்ணைத்திறந்தும் நாம் வாழ்ந்த காலங்களில் விழித்திருந்த பொழுதுகளைவிட உறங்கிய காலங்களே மிக அதிகம்.
பொருளாதாரப் பிரச்சினை எங்களுக்கு.
இந்தக்குருவிக்காரர்களுக்கு பொருளாதாரமே ஒரு பிரச்சனையோ?
''இவர்கள் வாழ வழியில்லாதவர்கள் அல்ல...மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்தவர்கள்...நாளாந்த வாழ்க்கையிலிருந்து தாங்கள் வித்தியாசப்படவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவர்கள் இப்படி மாறியிருக்கிறார்கள்.சட்டங்களுக்குள் தங்களைக் கட்டிக்கொள்ள இவர்கள் விரும்புவதில்லை...சுதந்திரமாய் வாழ விரும்புகிறார்கள்.
இயற்கையை எதிர்த்து அதற்கு மாறாக வாழவேண்டும் என்ற மனோபாவமும் இவர்களிடம் நிறைய உண்டு.போதைப்பொருட்கள்..தன்னினச்சேர்க்கை...
இவைகள் எல்லாம் இவர்களுக்குத் தண்ணீர்பட்ட பாடு!''—என்றெல்லாம் இவர்களைப்பற்றி விமல் தெரிந்துவைத்திருந்தான். முதல்முறை —பெர்லினுக்கு வந்த புதிதில்—இவர்களைப் பார்த்தபோது விமலுக்கு இவர்கள்மீது ஒரு வெறுப்பே ஏற்பட்டது.இவர்களைப்பற்றித் தெரிந்துகொண்டபிறகோ இவர்கள்மீது ஒரு இரக்க உணர்வே ஏற்படுகிறது.
விமலின் தனிமைச்சிந்தனையைக் கலைத்துவிடுகிறமாதிரி இந்த நேரத்தில் குருவிக்காரன்கள் இவனருகே நிற்கிறார்கள்.
விமலுக்குச் சங்கடமாக இருந்தது...
இவர்கள் சத்தம்போட்டுக்கொண்டிருப்பது எரிச்சலைத் தந்தது...
''கான்ஸ்ற் டு ஸ்பிரெஹன் டொச்?''
—விமலுக்கு முன்னாலிருந்த குருவிக்காரன் சற்றுக் கடுமையான தொனியில் கேட்டான்.

''நைன்!'' என்று மெதுவாகச்சொல்லித் தலையசைத்தான் விமல்...
குருவிக்காரன் இவனைக்கோபப்பார்வை பார்த்தான்...தன்னருகே
நின்றிருந்த நண்பனின் தொடையில் தட்டினான்..
''ஹேய்...!''
–அவன் திரும்பி இவனைப்பார்த்தான்...விமலைச்சுட்டி ஏதோ சொன்னான்...
இருவரும் சிரித்தார்கள்...
விமலுக்கு மனம் கொதித்தது...
''என்னைப் பரிகசிக்கிறார்களா'?'' –அன்றைக்கு ஒருநாள் தன்னையும்
கிறிஸ்தோபரையும் தாக்கிய மொட்டையன்களின் நினைப்பு வந்தது...
இந்தக்குருவிக்காரர்களும் அவர்களைப்போன்றவர்களோ'?
அடுத்த தாக்குதலுக்கு ஆயத்தம் செய்கிறார்களோ'?
''இங்கேயே உயிர்போனாலும் பரவாயில்லை...எவனாவது என்னில் கைவைத்தால்
திருப்பித் தாகவேண்டியதுதான்!'' –என்று மனதில் ஒரு வெறிவந்தது.
''ஹலோ!'' என்று ஒரு குருவிக்காரன் விமலை நெருங்கினான்.
அந்தக்குரல்...அந்தமுகம்..'? எங்கோ பழக்கப்பட்டதுபோல்...!
விமலின் தோளில் உரிமையுடன் தட்டிய அந்தக்குருவிக்காரன் சிரித்தான்...
''ஆச்சரியப்படாதே...நான்தான்!''
(அடுத்த இதழில்)


பூவரசு இனிய தமிழ் ஏட்டில்
இடம்பெறும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு
அவற்றின் படைப்பாளர்களே பொறுப்பாளர்கள்.
அனுப்பப்படும் ஆக்கங்கள் யாவும்
பூவரசு வெளிவரும் மாதத்தின்
முதல்மாதம் 15ம் திகதிக்குமுன்பு
கிடைக்கத் தக்கதாக அனுப்பப்படவேண்டும்.
தாமதமாக வரும் ஆக்கங்கள்
மறு இதழ்களில் வெளியாகும்.
–ஆசிரியர்.

## அறிமுகம்.



காதலில்தான் மௌனம் சம்மதமென கொள்ளப்படுகின்றது.
அங்கே மௌனம் தன் அர்த்தம் இழந்து, நெகிழ்ந்து தன்னிலை மறக்கையில் சம்மதமாகின்றது.
அந்த மௌனப் போதுகளில் கன்னம் மெருகேறி, கண்ணிமைகள் தாழ்ந்து, இதழ்கள் துடித்து மௌனம் மொழியாகின்றது. இப்படி பொய்யாகிப்போன மௌனம் விருப்ப உணர்வாகின்றது.
காதலல்லாத நிகழ்வுகளில் மௌனம் இப்படியெல்லாம் விருப்ப உணர்வாவதில்லை. கோப உறைதலாகின்றது.
மௌனம் கொள்ளாத'சூழல் கைதியை' சமரசங்கள் ஆட்கொள்ள, போர்க்குணம் தணிகின்றது. ஆதலால் மௌனம் தவிர்க்க இயலாத நிகழ்வாகின்றது.
மௌனங்கள் உறைந்து உறைந்துதான் கோபாக்கினியும் மூள்கின்றது. சொட்டு சொட்டாய் தேங்கிய மௌனம் மடை உடைத்து பாய்கையில் எல்லைகள், விலங்குகள் சிதறுகின்றன. கட்டறுந்த சிறகுகள் விரிகின்றன.
நீண்ட ஆழ்ந்த மௌனங்கள் இப்படித்தான் இலக்கியங்களாகின்றன. சாட்சியங்களாகின்றன.
வரலாற்று குருடர்களை புறந்தள்ளி மௌனம் எக்காளமிடுகையில், உலகம் குலுங்குகின்றது. உதயங்கள் எழுகின்றன.
வரலாறு மீள் படைப்பாகின்றது.
தூங்கும் எரிமலையாய், அலை எழா ஆழ்கடலாய், புயல் எழுமுன் தனியமாய்....
கூட்டு மௌனங்கள்.

மௌனங்களின் சங்கமிப்பு சங்கமாய்....




**மௌனம் 1**

கலை இலக்கிய இதழ்

தொகுப்பாளர்:
கி.பி.அரவிந்தன்

இணை தொகுப்பாளர்:
க.முகுந்தன்

கணனி பதிவு:
பொ.இரவிச்சந்திரன்

வடிவமைப்பு:
ஆத்மன் & அசாபீகன்

வெளியீடு:
A.F.T.C. சார்பாக பு.விக்னேஸ்வரன்




✉ :
**MOUNAM**
6, Square du Roule
92200 NEUILLY S/SEINE
FRANCE




ரி. தயாநிதியின்

## ஆத்மாவின் ராகங்கள்

(தொலைக்காட்சி நாடகம்)



''திருமணத்திற்காக வெளிநாட்டுக்கு நிர்ப்பந்தத்தால் அனுப்பி வைக்கப்படும் அல்லது அழைக்கப்படும் ஒரு பெண்ணின் மன உணர்வுகளின் பாதிப்பு!...பாரிஸில் அகதி அந்தஸ்து பெற்றவுடன் திருமணச்சந்தையில் திடீர்விலையேற்றம்பெறும் மாப்பிள்ளைகளுள் வித்தியாசமாக சீதனம் வாங்காமல் திருமணம் செய்யும் கொள்கையோடு தாயகத்தில் முடமாக்கப்பட்ட பெண்ணுக்கு வாழ்வளிக்கும் முற்போக்கு இளைஞன்-அவன்மூலம் போராளியாக மாறமுடியாமற்போனாலும்,சமூகநிலையில் எல்லோருக்கும் ஏதாவதோர் பொறுப்பும் கடமையும் உண்டு என்று உணர்த்தும் செய்தி.

பலதரப்பட்ட கருத்துக்களை குறுகிய ஓர் தொலைக்காட்சி நாடகத்தில் நிறைவாகத் தருவதென்பது சிரமம்தான்.ஆனால் இம்முயற்சியில் நாடகாசிரியர் ஓரளவு வெற்றிபெற்றிருக்கிறார் என்றே சொல்லவேண்டும்.

மாப்பிள்ளையாக நடித்தவரின் மிகைப்படுத்தப்படாத இயல்பான நடிப்பு நன்றாயிருக்கிறது.

யாழ்ப்பாண நடுத்தரவர்க்கத்தின் மனி ஓடர் பொருளாதாரத்தில் வாழும் பெற்றோரின் மனோநிலையும், பாசமும் புலம்பெயர்ந்தோரும், புலம்பெயர மறுப்போரும், விடுதலைப்போராளிகளுமான ஈழமக்களின் வாழ்க்கையை வைத்துப் பின்னப்பட்ட கதை.

புலம்பெயர்ந்தோர் எல்லோரும் நாட்டுப்பற்றற்றவர்கள் என்ற கருத்தை மறுத்துரைக்க நாடகாசிரியர் முயற்சித்திருக்கிறார்.அவசியமான கருத்து.வரவேற்கப்படவேண்டிய கருத்தும்கூட.

சுமன் இறந்த செய்திவரும் காட்சி நாடகத்தில் மிக உருக்கமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

கடிதத்திற்கான நாடகாசிரியரின் குரலும் அதில் தெறித்த உணர்ச்சிகளும் ஓர் குணச்சித்திர நடிகர் தயாநிதி என்பதைப் பறைசாற்றியது.

மௌனமாக தீர்மானத்தைச்செய்யும் தங்கை,தம்பியின்பிரிவினால் புலம்பி அழும் அக்கா,மைத்துனியின் படத்திற்கு ஊதுவத்தி ஏற்றும் மைத்துனன், தாய் அழ தாயிடம்செல்லும் குழந்தைகள் என்று அந்தக்காட்சி மிக அருமை...

ஆனால் யாழ்ப்பாணத்தைக்காட்டியபோது தந்தையின் வசனங்கள் நீண்டதால் அந்தக்காட்சியின் இறுக்கம் தளர்ந்துபோய்விட்டது.தாய்க்கு இன்னும் கொஞ்சம் வசனம் தந்து அழவைத்திருக்கலாம்.வசனம் குறைந்தபோதும் அமைதியாக மகனின் படத்தைப்பார்ப்பதும் எடுத்துத் தடவுவதுமாக தன்பங்கை நிறைவாக்கி தான் ஓர் பண்பட்ட நடிகை என்பதை நிரூபித்திருக்கிறார் நீலாட்சி.

அக்காவும் அத்தானும் பாராட்டப்படவேண்டிய நடிகர்கள் விடுதலைப் போராளிகளின் தியாகம் மன உறுதி இவைகள் அழகுறச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. பாத்திரங்களை ஏற்றவர்களும் தங்கள் பங்களிப்பைச் சிறப்புறச்செய்திருக்கிறார்கள்.

படப்பிடிப்பிலும் படத்தொகுப்பிலும் இன்னும் கவனம் செலுத்தப்படவேண்டும். தாயகக்காட்சிகளோடு இணைத்து படத்தை முழுமையாக்குவது மிகவும் சிரமமானது...பாராட்டப்படவேண்டியதே!

பாரிஸ் வீடியோ மலரில் இடம்பெற்ற "அம்மாவின் ராகங்கள்"

# மனிதன் மட்டுந்தான் மனிதனா?

வானில், பரிதியில், மலையில், ஆற்றில், தாமரையில், புல்லில், மரங்கொத்தியில், ஓணானில், தெருவிளக்கில், குடையில் - எதிலும் மனிதனைப் பார்க்கிறேன்.

மனிதனுக்கு உள்ளே இருப்பதைவிட இன்னும் கூடுதலாக அவன் மனிதனுக்கு வெளியே இருக்கிறான்.

தெருவில் கிடக்கும் கூழாங்கல்லில் கூட மனிதனின் முகம் தெரிகிறது.

இந்த மனிதனில்தான் நான் இலக்கியம் பிழிகிறேன்.

எதிலும் மனிதனைக் காண்பது எளிதாக இருந்தபோதும் அவனை இலக்கியமாக்குவது எனக்கு அத்தனை எளிதாக இருக்கவில்லை.

பெரிய எழுத்தாளர்கள் சிலர் பெருமைப்பட்டுக் கொள்வது போல் எனக்கு அப்படி ஒன்றும் அள்ளிக்கொட்டவில்லை. ஒவ்வொரு எழுத்தையும் வருந்தி முயன்றே எழுதினேன்.

கதைகளை உருவாக்குவதில் ஏற்பட்ட முயற்சியின் களைப்பை விட; கதைகளின் முடிவில்; மனதில் நிற்பதுபோல் படைக்கப்பட்டுள்ள சொற்றொடர்களை அமைக்க நான் பெரும்பாடு பட்டிருக்கிறேன்.

நெடுங்கால முயற்சி.

1961 என்று நினைவு.

விறுமிக்க தமிழர் தலைவரும், விடுதலை உணர்வாளருமான ஈரோடு பெரியவர் மு. சின்னசாமி அவர்களின் 'சமநீதி' இதழில் இக்குறுங் கதைகளை நான் எழுதத் தொடங்கினேன்.

நீண்ட இடைவெளிக்குப் பின்-

1969-70-71களில் தமிழீழத்தின் தனிப்பெரும் சிந்தனையாளர் சிவஞான சுந்தரம் அவர்களின் 'சிரித்திரன்' இதழில் 'மாத்திரைக் கதைகள்' என்னும் தலைப்பில் என் கதைகள் தொடர்ந்தன.

ஒரு விடுதலைப் போராட்டத்தின் நடுவில் ஓயாத அலைவுகள் - சிறைச்சாலைகள் - தலைமறைவுப் பொழுதுகள் - உசாவல்கள் - கடல்கடந்த பாய்ச்சல்கள் - இவற்றின் இடையில் ஒவ்வொரு கதையாய்ப் படைத்தேன்.

அடிக்கடி எங்கள் வீட்டில் 'தேடுதல்' என்று சொல்லிக் கொண்டு பாயும் சிங்கள வெறிப்படையினர் கையில் என் பிற இலக்கியங்களைப் போலவே இக்குறுங்கதைகளில் சிலவற்றையும் பறிகொடுக்க வேண்டியதாயிற்று.

நான் அழுதிருக்கிறேன்.

முப்பது ஆண்டுகளில் நாற்பது கதைகளை மட்டுமே காப்பாற்ற முடிந்திருக்கிறது.

நெருப்பில் குளித்ததுபோக நீறாகாமல் இருக்கும் என் இலக்கியத்தின் ஒருபகுதியை உங்கள் முன் வைக்கிறேன்.

*காசி ஆனந்தன்*

---

அடுத்த இதழில்—


## நமது கலைஞர்

"நாட்டியத்தாரகை"

*திருமதி.வானதி தேசிங்குராஜா*

அவர்களின் பேட்டி இடம்பெறுகிறது.

# புடம்



காட்டில் இருந்த மூங்கில் ஒருநாள் கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக் கம்பி தன்னைத் துளைத்தபோது 'ஐயோ உடல் புண்ணாகிறதே..' என்று கதறி அழுதது.

'கொஞ்சம் பொறுமையாக இரு...' என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று.


மூங்கில் புல்லாங்குழல் ஆனது.

மேடையில்—

உலகமே மயங்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று.

அது சொன்னது —

'புண்பட்டவன்
பண்பட்டவன்.'




---

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது!

## "சைவ சமயமும்—
## சர்வமத சமரசமும்."

*சி. கமலநாதன்*
எழுதுகிறார்.

பிறேமன் தமிழ் மங்கையர் அணியைச்சேர்ந்த மஞ்சரி சில சகோதரிகளைச் சந்தித்தபோது–

மஞ்சரி:– குடும்பங்களில் கணவன் மனைவியிடையே சம உரிமை கொடுக்கப்படவேண்டும் என்பது எனது கருத்து.இதுபற்றிய உங்கள் கருத்துக்களை அறியவிரும்புகிறேன்.

சகோதரி(1):–சில கணவன்மார் "எனது மனைவிக்கு எல்லாவகையிலும் சுதந்திரமுண்டு.எதுவித தடையுமில்லை!" என்று வாயளவில் சொல்லுவர்.ஆனால் "எனது வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேசக்கூடாது.நான் குடும்பத்தலைவன்.பெண் வாய்திறந்து நியாயத்தைக்கேட்கக்கூடாது!" என்னும் கொள்கைகளை மனத்தில் வைத்துக்கொள்கிறார்கள்.இது அடுத்தவர்க்குத் தெரிவதில்லை.

சகோதரி(2):–பெண்கள் வேலைக்குச்செல்வதை விரும்பாத ஆண்கள் உண்டு.

மஞ்சரி:– வேலைக்குச்செல்வதை உங்கள் கணவர் விரும்பவில்லை என்றால் அவர் உங்களில் அளவுகடந்த அன்பு வைத்திருக்கலாம். உங்களைப்பூப்போல வைத்திருக்க அவர் விரும்பியிருக்கலாம்.

சகோதரி(1):–நீங்கள் சொல்வது இளம் தம்பதியினருக்குப் பொருத்தமானதாக இருக்கலாம்.ஆனால் சில கணவன்மார் தமது மனைவி சக ஆண்களுடன் சகஜமாகப் பழகுவதையே விரும்புவதில்லை. அப்படிப்பழகும் சிலபெண்களின் வீட்டில் பூகம்பமே வெடிக்கிறது.

**மஞ்சரி:–இவ்வாறான மனோநிலையிலுள்ள ஆண்கள்பற்றி உங்கள்கருத்தென்ன?**

**சகோதரி(3):–அவர்கள் தன்னம்பிக்கையற்றவர்கள் என்றே நான் சொல்வேன்.**

மஞ்சரி:– அந்நிய நாடுகளில் வாழும் பெண்கள் வேலைக்குச் செல்வதால் பல நன்மைகள் உண்டு.பலநாட்டவர்களின் சிநேகம் ஏற்படுகிறது. வேற்று மொழிகளை அறியவும் கற்றுக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது.வெளிநாடுகளில் வாழும் முறைமைகளைப்பற்றி அறியச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.உடற்பயிற்சியாவதோடு சுறுசுறுப்பாகவும் இருக்கமுடிகிறது.அத்துடன் பொருளீட்டவும் முடிகிறது.

சகோதரி(1):–சிலரைப்பொறுத்தவரை இவ்வகையில் தன் மனைவி முன்னேறுவதை சில ஆண்கள் விரும்புவதுகூடக் குறைவு.சொல்லப்போனால்,தமது மனைவிமாரின் முன்னேற்றத்தை சில ஆண்கள் தடைசெய்கிறார்கள் கணவனிலும் அறிவுகூடிய மனைவி விரைவில் முன்னேறிவிட வாய்ப்பிருப்பதால் குடும்பப்பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு. தனது இயலாமையை மற்றவர்கள் தெரிந்துகொண்டால் தம்மை கீழ்த்தரமாகக்கணிப்பார்களோ என்ற எண்ணமும் ஏற்பட்டுவிடும்.

சகோதரி(4):–வேலைக்குச்செல்ல அனுமதிக்கும் சில கணவன்மார் மாத முடிவில் முழுப்பணமும் தமதுகைக்குச் சேரவேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள்."உழைக்கிறாய் என்ற துணிவில் ஊதாரியாகச் செலவு செய்யாதே!" என்று மனைவிக்குப் புத்திமதிகட்டும்

## ஒரு சந்திப்பு!

அவர்களே,தமது சொந்தச்செலவு என்று வரும்போது(தமது தாய் சகோதரங்களுக்கு உதவுவதுபோன்ற செலவினங்களில்) மனைவியின் வருமானத்தையும் செலவிடுகிற அவர்கள் மனைவியின் பிறந்தவீட்டுத்தேவைகள் என்று வரும்போதுமட்டும் கண்டுகொள்ளாமல் இருந்துவிடுகிறார்கள்.

மஞ்சரி:-இப்படிப்பல இடங்களில் நடப்பதாக நானும் அறிந்திருக்கிறேன்.

சகோதரி(2):-மனைவி என்பவள் நடமாடும் இயந்திரம் என்பது சில கணவன்மாரின் நினைப்பு.வெளியவர்க்கு உதவி என்றவுடன் விரைந்துவிடும் அவர்கள்,சொந்த மனைவியின் கஷ்டங்களில் பங்கெடுப்பதில்லை.வெளியே நண்பர்களுடன் வெட்டிப்பொழுது போக்கும் அவர்கள்,வீட்டில் மனைவியின் சமையலில் குறையிருந்தால் வீட்டை இரண்டுபடுத்திவிடுவார்கள்.

சகோதரி(1):-எங்கள் பெண்கள் கூடுதலாக நமது கலச்சாரத்துக்குக் கட்டுப் பட்டவர்கள்.கொண்ட வாழ்க்கையே கண்கண்ட தெய்வம்!'' என்பதுபோல் கணவன்மாரில் அளவுகடந்த அன்பு செலுத்துவர். ஆனால் அதைச் சில கணவன்மார் புரிந்துகொள்வதில்லை. அவளது பாசம் சுயநலம் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

மஞ்சரி:-எல்லோரது பிரச்சினைகளிலும் கடைசியாகக்கூறப்பட்ட பிரச்சினை என்னைச் சிந்திக்க வைக்கிறது.அன்பு என்பது சுயநலத்தால் வருவதுதானா?

(இதுபற்றி உங்கள் கருத்துக்களையும் எழுதுங்கள்: தொகுப்போம்)

மஞ்சரியின் அடுத்த கேள்வி:

இலங்கையில் வாழ்ந்த, வாழுகின்ற நமது பெண்கள் சோர்வற்று இயங்கும்போது இன்று இங்குவாழும் பெண்கள் பலர் சுறுசுறுப்புக் குறைவாகக் காணப்படுகிறார்கள் என்பது எனது கருத்து. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

சகோதரி(1):-எம்மைச் சுறுசுறுப்பற்றவர்கள் என்று எப்படிச்சொல்லுவீர்கள்? வீட்டுவேலைகள்,சமையல்வேலை,சலவைவேலை,குழந்தைகளின் வேலை என்று தலைக்குமேல் வேலைகள்.இவைகளையெல்லாம் இங்கு யார் செய்கிறார்களாம்?

மஞ்சரி:-வீட்டுவேலை என்று பெரிதாகச் சொல்கிறீர்கள்.நம் நாட்டில் நாம் வாழ்ந்த வீடுகளுடன் ஒப்பிடும்போது இங்கு புறாக் கூடுதானே. பெரிய வீடா?..வளவா?சமையல்வேலை என்பதை அன்றுபோல் இன்றும் அலுத்துக்கொள்கிறீர்கள்..அம்மியில் அரைத்து,உரலில் இடித்து,தேங்காய்துருவி,பால்பிழிந்தா சமையல்செய்கிறீர்கள்?

இவ்வளவு வேலைகளைச்செய்ய எமது தாய்மார் எவ்வளவு இருந்தெழும்பியிருப்பார்கள்..அதோடு ஒப்பிடும்போது இதென்ன பெரிய சமையலா'? சலவை வேலை என்றால் அதையும் இங்கு இயந்திரம்தானே செய்கிறது.
குழந்தைகளின் வேலையென்று சொல்லுங்கள்..அதை நானும் குறை சொல்ல வல்லை..அன்றைய குழந்தைகளிலும் இன்றைய குழந்தைகள் எல்லாவகையிலும் முன்னேற்றம்தான் (குழப்படியிலும்கூட).
குழந்தைப்பாராமரிப்பு என்பது இலகுவான வேலை இல்லைத்தான். இங்கு குழந்தைகளை வீட்டிற்குள்ளே வைத்திருக்கிறோம்..அதனால் குழப்படியும் கூடுகிறது.

சகோதை(2):--அங்கு மாமி மச்சாள் அக்கா தங்கை என்று உதவியுண்டு. இங்கு அந்த உதவிகள் இல்லையே.நாம்தானே எல்லாம் செய்யவேண்டி இருக்கிறது.

மஞ்சரி:-அவர்கள் உதவிக்கு வருவதால் வேலையமல்லவா கூடுகிறது. அவர்கள் குழந்தைகள் என்று பலருக்குச் சமையல்செய்யவேண்டும், அவர்களின் குழந்தைகள்,எங்கள் குழந்தைகள் பாவும் விளையாட்டுப்பொருட்களை ஒதுக்கித் துப்புரவு செய்யவேண்டும். அவர்களின் சண்டைகளைத்தீர்க்கவேண்டும்.இதிலும் பார்க்க நம்கையே நமக்கு உதவி என்று வாழ்வது நல்லதல்லவா'?

சகோதரி(2):-அதுவும் சரிதான்.

சகோதரி(1):-வீட்டில் அடிக்கடி திடீர் விருந்தாளிகள் வருவதால் வீட்டுவேலைகள் கூடிவிடுகின்றன.நீங்கள் கூறியதுபோல் அவ்வேலைகளைச்செய்யவே நேரம் போதவில்லை.

மஞ்சரி:-இதற்கு உங்களில்தான் குறைசொல்லுவேன்..உங்கள் வீட்டுவேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு அவர்களுடன் நீங்களும் அரட்டையடிக்க ஆரம்பித்துவிட்டால் உங்களுக்கு வேலை இல்லையென்று அவர்களும் அடிக்கடிவந்து வெட்டிப்பொழுதுபோக்குவார்கள். இங்குதான் எல்லாவீடுகளிலும் ரெலிபோன் வசதி இருக்கிறதே. விருந்தினர் உங்களுக்கு நேரம் இருக்கிறதா என்பதை அறிந்து வ[illegible]ாம்தானே உங்க[illegible] சிநேகிதர்களுக்கு நீங்கள் இதை எடுத்துச்சொல்லிப் புரியவைக்கலாமே.

சகோதரி(3):-என்னைப்பொறுத்தவரையிலும் சில சகோதரிமார் சுறுசுறுப்புக் குறைவாகவே காணப்படுகிறார்கள்.வீட்டுவேலைகளைப் பெரிதாகக்காட்டி சிலர் கணவன்மாரை கஷ்டபடுத்துவதும் உண்டு. இது முடிந்துவிட்டது...அதுமுடிந்துவிட்டது கடைக்குப்போங்கோ அதைச்செய்யுங்கோ இதைச்செய்யுங்கோ என்று அவர்களுடன் சினப்பார்கள்.வேலையால் களைப்புடன் வரும் கணவன்மார் மனைவியின் சொல்லைக்கேட்டு கடைபூட்டும் நேரத்திலும் கடைக்கு ஓடும் காட்சி பரிதாபமானதுதான்.

மஞ்சரி:-சகோதரிகளே!இந்தவகையில் பெண்களாகிய எங்களிலும் பிழையுண்டு. சமையல் செய்வது தொலைக்காட்சியில் படம்பார்ப்பது இவைகளில் காட்டும் ஆர்வத்தை முடிந்தளவு வேலைகளிலும் காட்டினால் எங்கள்

உடலும் அழகுற இடமுண்டு.ஆண்களைமட்டும் குறைசொல்லமுடியாது எம்மில் உள்ள தவறுகளை நாம் முதலில் புரிந்து நடக்கவேண்டும்.
அநேகமான பெண்கள்,வரும் மாத வருமானத்துடன் வாழ்வது கஷ்டமாக இருக்கிறதென்று கவலைகொள்கிறார்கள். இதற்கு நாம் முடிந்தளவு ஓர் வரவு செலவுத்திட்டம் அமைத்துக்கொள்ளலாம். அடுத்த பூவரசு இதழில் அதுபற்றிப்பார்ப்போம்.உங்கள் ஆலோசனைகளையும் எழுதுங்கள்.

*மஞ்சரி*

## போதும்

அளவாக சிரித்தால்போதும்–இதயம்
அன்பால் நிறைந்தால் போதும்
தெளிவாகப்பேசினால்போதும்–எதையும்
சரியாக விளங்கினால்போதும்
வீடென்று சிறு குடிசையே
இருந்தாலும்போதும்
விழிமூடி அதில்கொஞ்சம்
உறங்கினால் போதும்
வேலைக்கு சிறிதேனும்
உணவிருந்தால்போதும்
விரும்பியதில் சிலவேனும்
[illegible]த்தாலே போதும்
வேதனையில் உழலாதிருந்தாலே போதும்
அளவறிந்து ஆசைப்பட்டால்
அதுவே போதும்
எனது தேசம் விடுதலைபெற்றால்
அந்த சுகம் இப்பிறப்பில் போதும்
போதும் என்ற மனம் ஒன்றே
போதும் எனக்கு எப்போதும்!.



– ஜெயந்திஸ்ரீ இரத்தினம்

# எங்கள்

## பொது அறிவு
## கேள்வி பதில்கள்:

* இலங்கை எந்தக்கண்டத்தில் உள்ளது?
  ஆசியா.

* கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் ஒன்றாய் இணைந்த தினம் எது?
  1990 ஐப்பசி 3

* தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் பொதுவான பண்டிகை எது?
  சித்திரை வருடப்பிறப்பு.

* இலங்கையை ஆண்ட அந்நியர்கள் யாவர்?
  போர்த்துக்கேயர்,ஒல்லாந்தர்,ஆங்கிலேயர்.

* உலகில் உயர்ந்த மலை எது?
  இமயமலை.


* உலகிலே சனத்தொகை அதிகமாக உள்ள நாடு எது?
  சீனா.

* ஜெர்மனி எந்தக்கண்டத்தில் உள்ளது?
  ஐரோப்பா.

* ஜெர்மனியைச்சுற்றியுள்ள நாடுகள் எவை-
  போலந்து,சுவிட்சர்லாந்து,யூகோஸ்லாவியா,ஆஸ்திரியா,பிரான்ஸ்,
  பெல்ஜியம்,நெதர்லாந்து,லக்ஸம்பேர்க்,டென்மார்க்.

* உலகில் நீளமான நதி எது?
  நைல் நதி.

* இலங்கையில் உள்ள நீளமான நதி?
  மகாவலி கங்கை.



# இளந்தளிர்கள்


# காகமும் நாகமும்.



மரக்கிளையில் கூடுகட்டி வாழ்ந்த ஒருகாகம்
முட்டையினை இட்டுவிட்டு இரைதேடிப்போகும் —கீழே
புற்றினிலே வாழுகின்ற பாம்பு ஒன்று அந்த
முட்டைகளைத் தான்புசித்து தன்பசியைத்தீர்க்கும்.



இப்படியே காகம் இடும் முட்டைகளை அந்த
இரக்கமற்ற கருநாகம் அழித்திடவே காகம்
மெத்ததுயர் அடைந்து அந்த நாகத்திடம் இருந்து
விடுதலைக்காய் வழியொன்று தேடி அலைந்ததுவே.



உற்றதொரு நண்பனென வந்த நரி ஒன்று
உணர்ந்ததுவே காகமதன் துன்ப நிலைதன்னை.
நல்லதொரு தந்திரத்தை நான் உரைப்பேன் கேளாய்!




நாட்டு ராணி வைத்திருக்கும் வைரமாலை தன்னை
காவலர்கள் பார்த்திடவே தூக்கிவந்து இந்த
புற்றினிலே போட்டுவிடு! நடப்பதைப்பார் என்று
புத்தி சொல்லக் காகம் அதைப் பற்றி நடந்ததுவே.



மாலையினைத்தேடி வந்த காவலர்கள் அந்த
பாம்புதனைக்கொன்றொழித்து மாலைதனை மீட்டார்.





இன்னொருவர் உயிர் பறித்து இன்பம்காண்போர் எல்லாம்
தம் உயிரும் தாம் இழப்பர் சடுதியாகத்தானே!



கவிதை: [illegible].  சித்திரம் : அருண்.

# அன்னை திரேசா.

க.ஸ்ரீதாஸ்.



**அன்னை திரேசா தன் நாட்குறிப்பில் குறிப்பிட்டிருந்தார்:**

"கால்கள்நோக நடந்தேன்.ஒருவேளை உணவுக்கும் சாதாரண ஒரு கூரைக்கும் ஏழைகள் தேடி அலையும்போது அவர்கள் எவ்வளவு வேதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவித்து இருப்பார்கள் என்பதை நான் யதார்த்தமாகவே அறிந்துகொண்டேன்." –நாள்முழுதும் சேரிமக்களோடு இருந்து அவர்களின் உறவு நிலைகளையும் அந்த மக்களின் தூய்மையான எண்ணங்களையும் மிக எளிதிலே புரிந்துகொண்டு அவர்களுடன் வாழத்தலைப்பட்டார். சேரிமக்கள் வறுமையில் வாடுவதுகண்டு மிகவும் வேதனைப்பட்டார். தன் உணவைக்கூட அவர்களோடு பகிர்ந்து உண்பதில் சந்தோஷப்பட்டார். அவர்களோடு வாழ்வது அவருக்கு மன நிம்மதியை அளித்தது.

மேலும் பல விடயங்களை விரிவுபடுத்த அவர் எண்ணினார். அன்னை தன்னுடைய இயக்கத்தில் பலரை இணைத்துக்கொண்டார். வசதியான குடும்பத்தில் பிறந்தவர்கள்கூட அன்னையின் ஆற்றல்களைக்கண்டு அவரோடு இணைய முன்வரலாயினர். இது [illegible] சந்தோஷத்தையும் ஒரு புதிய தெம்பினையும் கொடுத்தது. பலபெண்கள் இணைந்துகொண்டதால் சட்ட திட்டங்களை உருவாக்கினார்.நல்மனம்கொண்ட இதயங்கள் அவரோடு இணைந்துகொண்டனர். நாட்கள் செல்ல அன்னையின் அன்பும் அவர்செய்கின்ற பணிகளையும் அறிந்து பலர் இணைய விரும்பினர். இதனால் சிறிய இடத்தில் எல்லாவற்றையும் அவரால் பராமரிக்க முடியவில்லை. ஒரு புதிய இடத்தை வாங்கிக்கட்டினார். அதற்கு "அன்பின் தூதுவர்கள்" எனப் பெயர் அமைத்து சிறப்பாக நடத்தி வந்தார். காலடைவில் ஆண்களும் அன்னையின் அமைப்பில் சேர்ந்துகொண்டனர். மேலும் அன்னையின் பெயரால் கிளைகள் பரவின.

சேரிகளில் பள்ளிகளாகவும், வைத்திய விடுதிகளாகவும், மனநோய் இல்லங்களாகவும், குழந்தைகளைக் காக்கும் விடுதிகளாகவும் அன்னையின் பணி நின்றுவிடவில்லை. நாட்டில்நடக்கும் இயற்கையின் சீற்றங்களால் பாதிக்கப்படும் இடங்களுக்கு சென்று துயர்துடைப்பு ஸ்தாபனமாக அன்னையின் இயக்கம் இயங்கியது.

முக்கியமாக பங்களாதேஷ் போரின்போது இந்தியாவுக்கு அகதிகளாக வந்தவர்களை அன்னை அன்போடு வரவேற்று அவர்களை ஆதரித்து புகலிடம் கொடுத்தார். இது உலகத்தையே வியப்பில் ஆழ்த்தியது. இப்படிப் பலதரப்பட்ட சேவைகளைச்செய்தார். அவரது அன்பும் தொண்டும் ஆற்றுவெள்ளம்போல் திரண்டாலும் அவர்மனத்தின் சமாதானம் இல்லை. நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் நடக்கும் வன்முறைகள் மனிதாபிமானமற்ற செயல்கள் கண்டு மனம்பதைத்தார். மனித சமுதாயத்தில் பிரச்சினைகள் தீர்வதில்லை. நாளுக்கு நாள் பிரச்சினைகள் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றது. தீர்க்கப்படாத பிரச்சினைகளும் உண்டு. இவைகளைவிட மனித சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை அவரால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

சமத்துவம்,சகோதரத்துவம்,ஒற்றுமை என்பது வெறும் வார்த்தைகளாகவே காணப்படுகின்றது. இவைகளுக்கு ஒரு பரிகாரம் இருக்கக்கூடாதா? என்று இன்றும்கூட அவர்மனம் ஏங்கிக்கொண்டுதான் இருக்கின்றது.

ஆலயமணியின் நாவு சிறியதுதான்,ஆனால் அது எழுப்பும் இனிய ஓசை எங்கெல்லாம் கடந்துசென்று ஒலிக்கின்றது. அது எத்தனையோபேரைத் தட்டி எழுப்புகிறது. அன்னையின் உயரம் நான்கு அடிகள்தான். ஆனால் இச்சிறிய உருவம் மிகவும் உறுதிகொண்டு மிகப்பெரிய கடமைகளைச் செய்து உலக மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமாக அன்னை வாழ்ந்துகொண்டிருக்கிறார். மற்றவர்களைக்கவனித்து, மற்றவர்களின் துன்பத்தில் பங்குகொண்டு மற்றவர்களுக்காக வாழவேண்டும் என்ற எண்ணம் ஒரு சிலரின் மனத்தில்தான் உருவாகும். இது அன்னையின் மனத்தில் ஆழப்பதிந்த விடயம். எல்லோருக்கும் இந்த மனப்பான்மை வந்துவிட்டால் உலகத்தில் அமைதியும் சமாதானமும் தானாகவே உருவாகும். அவரால் இன்று எவ்வளவோ இயக்கங்கள் உருவாக்கப்பட்டன. மனிதகுலத்தில் புறக்கணிப்பு, உதாசீனம், தன்னம்பிக்கை இன்மை, சுயநலம் போன்றவற்றை மனிதன் அறவே விட்டுவிடவேண்டும் என்பதுதான் அன்னையின் ஆசை. அதற்காக அவர் இறைவனை என்றும் வேண்டிக்கொள்வதுண்டு. மனிதாபிமானம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. அது எல்லோரிடமும் பிறப்பதுதான் அவசியமானது.இந்த மனிதாபிமானம் அன்னையின் மனத்தில் இருக்கின்றபடியால்தான் இன்றும் அவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார், மக்கள்மனத்தில் இடம்பிடித்திருக்கிறார். உலக சமாதானத்திற்காக 1979ம் ஆண்டு நோபல்பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.பாரதத்தின் மிக உயர்ந்த விருதான "பாரத ரத்னா" விருது வழங்கப்பட்டது.இப்படிப் பல பாராட்டுக்கள் அவருக்கு வந்து சேர்ந்தபோதும் அவர் எளிமையாகவே வாழ்கிறார். அவரை எப்போதும் எம் மனதில் நினைவில் வைத்துக்கொள்வோம்!

(முற்றும்)

---

கடந்த இதழில்
கண்டுபிடித்தீர்களா?

அந்தப்படத்தில் ஒளிந்துள்ளவைகள்
இவைகள்தான்:
முயல்,பூ,கார்,கண்,
மீன்,புத்தகம்,வாத்து,
நட்சத்திரம்,பேனா,

# நாடுகளை நாமறிவோம்.

## இந்தோனீஷியா.

உலகின் 4வது பெரிய சனத்தொகையைக்கொண்ட இந்தோனீஷியாவில் 184 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். உலகில் அதிகமான எண்ணிக்கையில் முஸ்லீம்கள் வாழும் நாடும் இதுவே. 13,667 தீவுகளைக்கொண்ட இந்தோனீஷியாவில் 300 விதமான மொழிபேசும் குழுக்களும் 100க்கு மேற்பட்ட இனங்களும் வாழ்கின்றனர். மிகப்பெரிய தீவான ஜாவாத்தீவு நாட்டின் 7வீதமான நிலப்பரப்பையே கொண்டிருந்தாலும் 110 மில்லியன் மக்கள் இங்குமட்டும் வாழ்கின்றனர்.

1967ம் ஆண்டு ஜனாதிபதி சுகார்ட்டோ முதன்முறையாகப் பதவியேற்றபோது இந்தியா,பங்களாதேஷை விட இருமடங்கு வறுமையில் இந்தோனீஷியா இருந்தது. 70ம் ஆண்டு காலப் பகுதியில் 60வீதமான மக்கள் வறுமையில் வாடினர். ஆனால் 90ல் இவ்வீதம் 15 ஆகக்குறைந்தது.

1965–66ம் ஆண்டுகளில் இந்தோனீஷியாவின் முதலாவது தலைவரான சுகார்னோவுக்கு எதிரான சதிப்புரட்சி தோல்வியடைந்ததை அடுத்து கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களை அழிக்கும் முயற்சியில் இராணுவம் கட்டவிழ்த்து விடப்பட்டது. ஒரு லட்சத்துக்கும் 10 லட்சத்துக்கும் இடைப்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். பல கிராமங்கள் முற்றாகவே அழிக்கப்பட்டன. 67ல்ஜெனரல் சுகார்ட்டோ பதவியேற்றதை அடுத்து நிலைமை ஓரளவு சீரடைந்தது.கம்யூனிஷம் கட்டுப்படுத்தப்பட்டதில் சுகார்ட்டோ தன்மைபெற்றார் என்றே சொல்லவேண்டும்.

1970ம் ஆண்டு உலகில் அதிகமான அரிசியை இறக்குமதிசெய்யும் நாடாக இருந்த இந்தோனீஷியா 1984ல் தன்னிறைவுபெற்றது. உலகின் 15 பெரிய எண்ணெய் உற்பத்திசெய்யும் நாடுகளில் இந்தோனீஷியாவும் ஒன்று.

கடந்த 25 ஆண்டுகளாக ஜனாதிபதியாகவுள்ள 71 வயதான சுகார்ட்டோ கடந்த மார்ச்மாதம் 11ம் திகதிமுதல் தொடர்ச்சியாக 6வது தடவையாக மேலும் 5 வருடங்களுக்கு ஜனாதிபதியாகத் தெரிவானார்.

சுவிசில் பூவரசு இனிய தமிழ் ஏட்டைப்பெற்றுக்கொள்ள–

K.Thirunathan
Land Str 70
4313 Moehlin
Switzerland.

**மேன்மைபோற நாம் ஒற்றுமையாய்**
**மேலைநாட்டினிலும் கலைவளர்ப்போம்!**

பிறேமன் தமிழ்க்கலைமன்றத்தின்

# ஓராண்டு நிறைவு விழா!

காலம்:07.08.1993 சனிக்கிழமை மாலை.
இடம்:**Burger Zentrum, Berliner Freiheit, Bremen.**

* பரிசளிப்பு
* பல்கலை நிகழ்ச்சிகள்.

மேலும் விபரங்களுக்கு:

**Frau.J.Felix**
**Schriftführerin**
**tamilischer Kultur Verein e.V.**
**Tessiner Str 10**
**2800 Bremen 41**

உங்கள் இல்லத்தின்
மங்கள வைபவங்களையும்,
மற்றும் கலை விழாக்களையும்
அழகியமுறையில்
படம்பிடித்திட –

# RAVI VIDEO

Neuwieder str.23
2800 Bremen 41
Germany

0421/402864

அன்பான இலக்கியப் பூவரசின்
ஆணிவேருக்கு!

புலம்பெயர்ந்தோர் மத்தியிலே இலக்கிய ஏடாக அங்கீகரிக்கப்பட்ட நீ உன்னில் வளர்ந்த சில கிளைகளை(முன்னைய இதழ்களில் நீ தொடக்கிவைத்த சில அம்சங்களை) முறித்துக்கொண்டாயா? அல்லது அக்கிளைகளை வளரவிட விருப்பம் கொள்ளவில்லையா?

நாங்கள் ஒரு நாலுபேர்.... நல்ல கருத்துக்களைத் தந்த பக்கங்கள்.... கருத்தாளர்கள் கிடைக்கவில்லையா? அல்லது பலகருத்துக்கள் ஒன்றிணைவதால் பூவரசின் ஆணிவேர் அசைந்திடுமோ என்ற அச்சம்கொண்டாயோ?

நமது கலைஞர்கள் வில்லிசைக்கலைஞர் இராஜன், நாட்டுக்கூத்துக்கலைஞர் இயேசுதாசன், நகைச்சுவைக்கலைஞர் இன்பராராஜா இவர்கள்மூவரும்தானா? இன்னும் பலர் ஜெர்மனியில் இருக்கிறார்களே... கலைஞர்களுக்கு குறைவில்லை... தேடிப்பிடிக்கமுடியவில்லையா? முயற்சிசெய்ய மறக்காதே! கலைஞர்கள் உன் அறிமுகத்தால் வளர்வார்கள் சமூகத்துக்கு நிறைவைத்தருவார்கள்.

சந்திப்போம் சிந்திப்போம்பற்றி சிந்திக்கவேயில்லையோ அல்லது சந்தித்தவர்கள் எல்லாம் சிந்திக்காமல் சிக்கல்களில் அகப்பட்டுக்கொண்டார்களோ? சிந்தித்து சந்திக்க முயற்சிசெய். சந்தித்து சிந்திக்கலாம்.

(என்) வாசகர்களைத்தேடி... இந்துமகேஷ் களைத்துவிட்டாரா? அல்லது பூவரசின் இரண்டுவருட வளர்ச்சி அவரைச்சோர்வடையச்செய்துவிட்டதா... (என்) வாகர்களைத்தேடும் அவரது பயணம் இன்னும் தொடரவேண்டும்....

இலக்கியப்பூவரசின் இந்தக்கிளைகள் நன்கு வளர்ந்து ஆயிராமாயிரமாய் மலர்களை மலர்விக்கவேண்டும் என்பது என் ஆசை... கவனிப்பாயா?

மணிதாசன்
(பிறேமன்)

---

உங்கள் மனம்திறந்த கருத்துக்களுக்கு நன்றி!
இந்த இதழைத் தயாரித்துமுடிக்கையில் உங்கள் கடிதம் வந்ததால் விபரமான பதில் தர இயலவில்லை. அடுத்த இதழ் உங்கள் கேள்விகளுக்கு விடை தரும்.

அன்புடன்,
— [illegible]

உலகத்தமிழர் இயக்கத்தின் கல்விச்சேவை ஜேர்மனி முழுதும் தமிழாலயங்களை ஆரம்பித்துவருகிறது. ''தமிழால் உலகில் ஒன்றிடுவோம்!'' என்ற தமிழ்நாதம் ஜேர்மன் தமிழ் மக்களிடையே ஒலிக்க ஆரம்பித்துள்ளது மகிழ்ச்சிக்குரிய விடயமே. இதுவரை மேற்படி கல்விச்சேவையினால் 35 தமிழாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருகின்றன. கடந்த மே மாதம் 16ம் திகதி 36வது தமிழாலயம் பிறேமவேட என்ற நகரில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.ஜேர்மனியின் வடபகுதியிலுள்ள சின்னஞ்சிறிய நகரம் இது.இங்கு மிகவும் குறைந்தளவு தமிழ்க்குடும்பங்களே வாழ்கின்றன.ஆனால் 24 தமிழ்ப்பிள்ளைகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

35 கிலோமீற்றர் தூரத்திற்குட்பட்ட ஏழு சிறுநகரங்களைச் சேர்ந்த தமிழ்க்குடும்பங்களுக்காக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது இங்கு விசேடமாகக் குறிப்பிடக்கூடியதொன்றாகும். தமிழ்ப்பெற்றோரின் ஆர்வத்தைக் கண்டு நீடாஷக்ஷன் மாநில அரசின் கல்விப்பிரிவு பிறேமவேட தமிழாலயத்திற்கு உதவ முன்வந்துள்ளது.ஆசிரிய ஊக்குவிப்பு வேதனம், போக்குவரத்து வசதி,ஆகிய உதவிகள் வழங்குவதுபற்றி மேற்படி கல்விப்பிரிவு அதிகாரிகள் மட்டத்தில் தீவிரமாக ஆராய்ந்துவருகிறது. பிறேமவேட மாநகரசபைத்தலைவர் திரு ஹென்ரிச் அய், வயதுவந்தோர் கல்விநிலைய அதிபர் திரு கிராப் வொன் குரோபன் ஆகியோர் தமிழாலயத்துக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.இதன் நிர்வாகியாக உலகத்தமிழர் இயக்கத்தினால் திரு வி.ஆர்.வரதராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.பெற்றோரின் சார்பில் திரு எஸ்.நடராஜா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.ஆசிரியையாக திருமதி புஸ்பராணி யோகரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.ஜேர்மனி தமிழ் மாணவர் அமைப்பு நடாத்தவிருக்கும் மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டிகளில் மேற்படி தமிழாலய மாணவர்களும் பங்குபற்றவுள்ளனர்.பெற்றோர்கள் மிகவும் ஆர்வத்துடன் இம்முடிவை எடுத்தனர். பிறேமவேட நகர் பொதுநூல்நிலையத்தில் தமிழ்ப் புத்தகப்பிரிவொன்றை ஏற்படுத்த தமிழாலயம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மேற்படி மாநகரசபை உறுதியளித்துள்ளது. மேலும் இத் தமிழாலயத்தில் சங்கீதம்,நடனம் ஆகியவையும் கற்பிக்கவேண்டுமென பெற்றோர்கள் வற்புறுத்தினர். வயதுவந்தோர் கல்விநிலையத்தில் தமிழ் வகுப்புக்களை உலகத்தமிழர் இயக்கத்தின் வடபிராந்திய பிரதிநிதி திரு எஸ்.கருணாநாதன் கற்பூரதீபமேற்றி ஆரம்பித்துவைத்தார்.

பிறேமவேட தமிழாலயம் மேன்மைபெற்று செழித்துவளர ''பூவரசு'' வாழ்த்துகிறது.

# பிறேமவேட நகரில் ஒரு தமிழாலயம்!

பூவரசு இனிய தமிழ் ஏடு
தனது மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி
நடாத்தவுள்ள இலக்கியப் போட்டிகள்பற்றிய
விபரங்கள்–

அடுத்த இதழில்!

விரைவில் வெளிவருகிறது!

*இந்துமகேஷ்*

எழுதிய *குறுநவீனம்*

## ஒன்று+ஒன்று=ஒன்று.

தனி நூல்வடிவில்.



## ஒன்று+ஒன்று= ஒன்று.

**இது ஒரு**
**பூவரசு வாசகர்வட்ட**
**வெளியீடு!**